## 12

# இருதயத்திற்குச் செல்லுவது

## (5:21-48)

*நீதியானது, பாவத்தின் வெளிப்படையான நடவடிக்கைக்கு அப்பால் செல்லுகிறது மற்றும் அப்படிப்பட்ட நடவடிக்கைக்கு முந்திய சிந்தனையைப் பற்றி எடுத்துரைக்கிறது (12:35; 15:18-20). இது வெளிப்படையான கட்டளைக்குக் கீழ்ப்படிவது மட்டுமின்றி, அந்தக் கட்டளைக்குப் பின்னால் உள்ள ஆவியைச் செயல்படச் செய்கிறது. இந்தக் கருத்தில் இயேசு, உண்மையில் வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரைக் காட்டிலும் கண்டிப்பானவராக இருந்தார். அவரைப் பின்பற்றுபவர்கள், இராஜ்யத்திற்கு உரிய இருதயத்தில் இருந்து இராஜ்யத்திற்குரிய தங்கள் நடவடிக்கைகளை விடுவிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார்.*

*20ம் வசனத்தில் உள்ள அவரது மிக உயர்வான கூற்று, மலைப்பிரசங்கத்தின் எஞ்சிய பகுதியை முன்னெதிர்நோக்கி அதைத் தொகுத்துரைக்கிறது. இயேசு, தமக்கு முன்பாகத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்திற்கும் அவர்களில் இருந்த தமது சீஷர்களுக்கும் போதிக்கையில், நியாயப்பிரமாணத்தைப் பற்றி மற்றவர்கள் கூறியிருந்தவற்றிற்கும் நியாயப்பிரமாணத்தின் உண்மையான உள்நோக்கத்திற்கும் இடையிலான ஆறு நேர்மாறான கருத்துக்களை முன்வைத்தார். அவர், கோபம் (5:21-26), விபச்சாரம் (5:27-30), விவாகரத்து (5:31, 32), ஆணையிடுதல் (5:33-37), பழிவாங்குதல் (5:38-42) மற்றும் விரோதிகள் மீது அன்புகூருதல் (5:43-48) ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். மக்கள் நியாயப்பிரமாணத்தின் எழுத்தைக் கடைபிடிக்க முடிந்திருக்கும் அதே வேளையில் அதன் ஆவியைப் புறக்கணிக்கக் கூடும் என்பதைக் காண்பிப்பதற்கு, அவரது விவரித்தல்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன.*

### கோபம் மற்றும் கொலை ஆகியவற்றைப் பற்றி (5:21-26)

**[21]“ ‘கொலை செய்யாதிருப்பாயாக’ என்பதும், ‘கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்.’ என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். [22]நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை ‘வீணனென்று’ சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; ‘மூடனே’ என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். [23]ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த**

**வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், [24]அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து. [25]எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. [26]பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்."**

*வசனம் 21.* இயேசுவின் முதல் நேர்மாறான கருத்திற்கான அவரது அறிமுகமான, **''பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்''** என்பது, நியாயப்பிரமாணத்தில் இருந்து வளர்ந்திருந்ததும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகச் சேர்த்துக் குவிக்கப்பட்டிருந்ததுமான, யூதப்பாரம்பரியங்களைக் குறிப்பிட்டார். அவர் வேதவசனங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் செய்தது போன்று, தமது நேர்மாறுகளை "என்று எழுதப்பட்டுள்ளது'' என்ற வார்த்தைகளைக் கொண்டு குறிப்பிடவில்லை. அதற்கு பதிலாக அவர், யூதர்களின் வாய்மொழியான போதனைகளையும் பாரம்பரியங்களையும் சுட்டிக்காண்பிக்கையில், "உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்'' என்ற சொற்றொடரைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தினார் (5:27, 33, 38, 43). 5:31ல் இந்தச் சொற்றொடர், "என்று உரைக்கப்பட்டது'' என்று சுருக்கப்பட்டுள்ளது.

இயேசு பயன்படுத்திய மொழிநடை, ரபீக்கள் விவாதத்தில் ஈடுபடுகையில், "அவர்களால் பயன்படுத்தப்பட்ட போதனைக் கருவியாக இருந்தது.''[1] அவர் ரபீக்கள் மற்றும் வேதபாரகர் ஆகியோரின் விளக்கங்களை, நியாயப்பிரமாணத்தின் தோற்றகால அர்த்தத்துடன் நேர்மாறாக ஒப்பிட்டார். அந்நாட்களில் இருந்த யூத மார்க்கப் போதகர்கள், கல்வித்துவமான நடையில், தங்கள் கடந்த காலத்தில் இருந்த மாபெரும் மார்க்கத்தலைவர்களின் கூற்றுக்களில் இருந்து அடிக்கடி மேற்கோள் காண்பித்தனர். இதற்கு மறுபுறத்தில் இயேசு, "வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய்'' பேசினார் (7:29). "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்ற ஒரு எளிய கூற்றைக் கொண்டு அவர், நியாயப்பிரமாணத்தில் அவர்கள் கொண்டிருந்த சாதுரியத்திறமையையும் அதனை அவர்கள் தவறாகப் பயன்படுத்தியதையும் புறம்பே ஒதுக்கித் தள்ளினார்.

"பூர்வத்தாருக்கு'' போதித்தவர்கள், " **'கொலை செய்யாதிருப்பாயாக' ... 'கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்'** '' என்று கூறியிருந்தனர். பத்துக் கற்பனைகளில் இருந்து இயேசுவின் முதல் மேற்கோள் (யாத்திராகமம் 20:13; உபாகமம் 5:17), பூர்வத்தாருக்கு நன்கு பழக்கமானதாக இருந்தது. இரண்டாவது மேற்கோள், கொலை செய்கிறவர் "நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பார்'' அல்லது நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவார் (உபாகமம் 16:18; 17:8-13) என்று அறிவித்த யூதருடைய பாரம்பரியத்தைப்

*பிரதிபலித்தது. கொலைசெய்தலுக்கு மரணத்தையே தண்டனையாக நியாயப்பிரமாணம் பரிந்துரைத்தது (யாத்திராகமம் 21:12; லேவியாராகமம் 24:21; எண்ணாகமம் 35:16-21, 30, 31).*

*செயல்விளைவில் யூதத்துவத் தலைவர்கள், பத்துக்கற்பனையின் இந்த ஆறாம் கட்டளையை, எண்ணங்கள் அல்லது எண்ணப்போக்குகள் ஆகியவற்றைப் பற்றிக் கருதாமல், உடல்ரீதியான செயலுடன் மாத்திரம் குறைத்துப் போட்டிருந்தனர். இந்த விளக்கத்தின்படி, சுயநீதியுடைய சட்டரீதியாக வாதிடுபவர் ஒருவர், தாம் யாரேனும் ஒருவரைத் தமது இருதயத்தில் கொலைசெய்திருந்த போதிலும், அவரின் உயிரை உண்மையில் பறிக்காது இருக்கும் வரையில், தம்மைக் குறித்து திருப்தி அடைய முடிந்திருந்தது. கொலைசெய்யும் எண்ணம் கொண்ட இருதயத்தை மூடி மறைத்து, அவர் "நான் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்திருக்கிறேன்" என்று தமக்குள் கூற முடிந்திருந்தது.*

***வசனம் 22.*** *இப்படிப்பட்ட சிந்தனைக்கு நேர்மாறாக,* ***"தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்"*** *என்று இயேசு கூறினார். கொலை செய்தல் என்ற பாவத்தில், உடல்ரீதியான நடவடிக்கை மாத்திரமல்ல, ஆனால் இருதயத்தில் நிலைப்பாடு மற்றும் விருப்பநோக்கம் ஆகியவையும் அடங்கியுள்ளன. இதேபோன்றே ஒரு கூற்றை யோவான் எடுத்துரைத்தார்: "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்" (1 யோவான் 3:15).*

*''நியாயமில்லாமல்'' என்ற சொற்றொடர் (காண்க KJV), அது கிரேக்கப் பிரதிகள் சிலவற்றில் ''கோபம்'' என்பதை மாற்றியமைக்கிறது, இது பிற்பாடு பிரதி எடுத்தவர்களால் கூட்டப்பட்டது என்பது நிச்சயம். இவ்வசனப் பகுதியில் இந்த இடைச்சொருகல், இயேசு ஏற்படுத்திய தைரியமான நியாயத்தீர்ப்பை மென்மையாக்குகிறது. ஒரு சகோதரன் மீது கோபம் கொண்டிருப்பதற்கான காரணம் ஒன்று சிலவேளைகளில் சுலபமாகக் கண்டறியப்படுகிறது, ஆனால் இயேசு, தமது இந்த நேர்மாறான கருத்திற்கு எவ்விதமான நியாயப்படுத்துதலையும் தரவில்லை.*

*புதிய ஏற்பாட்டில், இரண்டு வகையான கோபம் விவரிக்கப்படுகிறது. thumos என்ற கிரேக்கவார்த்தை, விரைவில் பற்றி எரிவதும் அதேபோன்று விரைவில் தணிந்து போவதுமான வகையிலான கோபத்தைக் குறிப்பதாக உள்ளது. Orgē என்ற வார்த்தை, நீண்டகாலம் வாழ்வதும், உண்மையான அல்லது கற்பனையான புண்படுதல்களின் மீது, போஷித்து ஆழ்ந்து உணர்ந்து எண்ணப்பட்டு வளர்க்கப்படுவதுமான வகையிலான கோபமாக உள்ளது. இயேசு தடை செய்தது, இரண்டாவது வகையிலான - மன்னிக்கவோ அல்லது மறக்கவோ செய்யாத வகையிலான - கோபமாக உள்ளது என்பது தெளிவு. இது நின்று, சமாதானமாக மறுத்து, பழிவாங்குவதற்கு வழி ஒன்றைத் தொடர்ந்து தேடுகிறது. இவ்வகையான கோபம் தேவனுடைய நீதியை நடப்பிப்பதில்லை (யாக்கோபு 1:20). இது "கோபமும் மூர்க்கமும் பொறாமையும்" (கொலோசெயர் 3:8) என்பவற்றுடன் தணிக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட கோபத்துடன் கிறிஸ்தவர்கள் படுக்கைக்குச் செல்லக்கூடாது என்று பவுல் வேண்டிக் கேட்டுக்கொண்டார் (எபேசியர் 4:26).*

மற்றும் இயேசு, **“தன் சகோதரனை ‘வீணனென்று’ சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; ‘மூடனே’ என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்”** என்றும் கூறினார். இன்னொரு நபரை இழிவாய்ப் பேசும் விரோத உணர்வுள்ள சொல்விளக்கங்களுக்கு எதிராக அவர் எச்சரிக்கை செய்தார். 2 இராஜாக்கள் 2:23, 24 மற்றும் ரபீத்துவப் போதனைகள் ஆகியவற்றில் இருந்து தரவழைக்கப்பட்ட உதாரணத்தில் இருந்து, டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், “வேதாகமம் எழுதப்பட்ட காலகட்டத்தில், பெயரிட்டு அழைத்தல் என்பது யூதக் கலாச்சாரத்தில் மிகவும் தீவிரமான மோசமான விஷயமாக இருந்தது, ஏனென்றால் பெயர்களுடன் முக்கியத்துவம் இணைக்கப்பட்டிருந்தது” என்று எழுதினார்.[2] மைக்கேல் வில்க்கின்ஸ் அவர்கள், “பெயரிட்டு அழைத்தல் என்பது, யூதக் கலாச்சாரத்தில் மிகவும் அவமானத்திற்கு உரியதாக இருந்தது, ஏனெனில் ஒருவரின் பெயருடன் இணைந்துள்ள தனிச்சிறப்பானது, அவரிடத்தில் அல்லது அவளிடத்தில் இருந்து அப்போது உரிந்து கொள்ளப்படும்” என்று கூடுதலாகக் கூறினார்.[3]

“Raca” (KJV; NIV) என்பது அரமாயிக் மொழிச் சொல்விளக்கமாகும், இதன் மிகச்சரியான மொழிபெயர்ப்பு நிச்சயமற்றதாக உள்ளது. “Raca” என்பது “ஒன்றுக்கும் உதவாதவன்” (NASB), “முட்டாள்” (Phillips), மற்றும் “வெறுமையான தலையுடைய மதியீனன்” (AB) என்று பல்வேறு வகையில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஜான் லைட் ஃபூட் அவர்கள், “raca” என்பது, “மற்றவரை மிகவும் பழித்துரைப்பதற்கு, திட்டும் ஒருவரால் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக இருந்தது: எபிரெய எழுத்தாளர்களிடத்தில் இது மிகவும் வழக்கமாகக் காணப்பட்டது, மற்றும் மக்களினத்தின் வாயில் மிகவும் சாதாரணமாக வழங்கப்பட்டு வந்தது” என்று கூறினார்.[4] இது, முரட்டுத்தனமான விரோதத்தை - இந்த வார்த்தையினால் மாத்திரமல்ல, ஆனால் குரலின் தொனியினாலும் - காண்பிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக இருந்தது. தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்ட இன்னொரு நபரிடத்தில் விரோதத்தைக் காண்பித்தலைக் காட்டிலும், கிறிஸ்துவைப் போல் இராமைக்கு அதிகமான பாவம் வேறு எதுவும் இல்லை (யாக்கோபு 3:8-10; 1 யோவான் 4:20). கிறிஸ்தவர் தமது “பிறமக்கள் பற்றிய சிந்தனைகளையும், அவைகள் எழுச்செய்யும் வார்த்தைகளையும், தேவனுடைய ஊடுருவும் நுண்ணாய்வுக்கு” கீழ்ப்படுத்துதல், அவர்கள் மீது விதிக்கப்பட்ட கடமையாகவே உள்ளது.[5]

“மூடன்” என்பதற்கான (*mōros* என்ற) வார்த்தையில் இருந்துதான், “சிந்தனையற்ற ஒருவர்” அல்லது “ஒழுக்கரீதியாகத் தகுதியற்று இருக்கும் ஒருவர்” - பாதை விலகியவர், போக்கிரி - என்று அர்த்தப்படும் (“moron”) என்ற வார்த்தை தரவழைக்கப்பட்டுள்ளது. இது கெடுமதியான விருப்பநோக்கத்தை மறைமுகமாக உணர்த்துகிறது. இப்படிப்பட்ட முடிவுசெய்தல் தேவனுக்கு மாத்திரமே உரியது, ஏனெனில் அவர் ஒருவர் மாத்திரமே இருதயத்தை அறிகிறார். இது மனரீதியான திறனைப் பற்றி அக்கறைப்படுவதில்லை, ஆனால் ஒருவரின் ஒழுக்கப் பண்பின்மீது அவதூறை வீசியெறிகிறது. இது ஒருவரின் நற்பெயரை எடுத்துப்போட்டு, அவரை தகுதியற்ற, ஒழுக்கவீனமான நபர் என்று முத்திரை குத்துவதாக உள்ளது.

நியாயத்தீர்ப்பிற்கு இவ்விடத்தில் மூன்று சொற்றொடர்கள் இயேசுவினால்

பயன்படுத்தப்பட்டுள்ளன, மற்றும் அவற்றின் கடுமைத்தன்மை படிப்படியாக வளரும் முறையில் அமைந்துள்ளன எனலாம். *(1)* கோபத்துடன் தொடர்புடையவகையில், ஒருவர் "நீதிமன்றத்திற்கு" முன் செல்வார் அல்லது "நியாயத்தீர்ப்புக்கு" (NIV) ஆளாவார். இதே சொற்றொடர் கொலையைக் குறித்து, 21ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு குறிப்பு, இயேசுவின் கூற்றிற்கு ஒரு உயர்வுநவிற்சி அணி தேவைப்படுகிற, ஒரு உள்ளூர் நீதிமன்றமாக இருக்கக் கூடும். மக்களில் எவ்வளவு பேர் கோபத்திற்காக விசாரணை செய்யப்படுகின்றனர்? "தேவனுடைய நியாயத்தீர்ப்பு மனதில் உள்ளது" என்பது இன்னொரு சாத்தியக்கூறாக இருக்கிறது.[6]

*(2)* "Raca" என்பதின் பயன்பாட்டைக் குறித்து, "உயர்நீதிமன்றம்" என்பதை எதிர்கொள்வார். இந்தச் சொற்றொடர் ஒரு உள்ளூர் நீதிமன்றத்தைக் குறிப்பிட முடியும் (10:17; மாற்கு 13:9), ஆனால் இது எருசலேமில் கூடிவந்த சனதெரீன் சங்கத்தையே வழக்கமாகக் குறிப்பிடுகிறது. இந்த நீதிமன்றம், பிரதான ஆசாரியர்கள், மூப்பர்கள் மற்றும் வேதபாரகர் உட்பட, செல்வாக்குள்ள எழுபத்தியோரு மனிதர்களைக் கொண்டிருந்தது.

*(3)* "மூடன்" (*mōros*) என்ற சொற்றொடர் "அக்கினி நரகத்தில்" தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய தகவல் அளிக்கிறது. "நரகம்" என்பது (*gehenna*) என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Gehenna என்பதன் உருவகம், எருசலேமின் தெற்குப் பகுதியில் இருந்த ஹின்னோம் பள்ளத்தாக்கில் இருந்து உதிக்கிறது. அருவருக்கத்தக்க இந்த இடமானது, மிகக்கொடிய அழுக்குகள் மற்றும் மோலேக் என்ற புறதெய்வ கடவுளுக்குப் பிள்ளைகளைப் பலிசெலுத்துதல் என்பதைக்கூட யூதர்களின் மனதிற்குக் கொண்டு வந்தது (2 நாளாகமம் 28:3; 33:6; எரேமியா 32:35). யோசியா இந்த இடத்தைத் தீட்டாக்கினார் (2 இராஜாக்கள் 23:10) மற்றும், இது பாபிலோனியர்கள் - யூதர்களின் இறந்த சரீரங்களைத் தூக்கி எறியும் இடமான - "சங்காரப் பள்ளத்தாக்கு" என்றாகும் என்பதாக, பிற்பாடு எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார் (எரேமியா 7:31-33; 19:6). ஹின்னோம் பள்ளத்தாக்கும், தீட்டான இடமாக, குப்பைக் குவியலாக, பயனற்ற பொருள்கள் அழிக்கப்பட்ட இடமாக ஆயிற்று.[7]

ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இந்த இடம், நித்திய அக்கினி தண்டனையை - அதாவது நரகத்தை - அடையாளப்படுத்தும் இடமாயிற்று. ஹின்னோம் பள்ளத்தாக்குடன் இணைவு கொண்டிருந்த அக்கினி, மூன்று திசைகளில் இருந்து எழும்பி இருக்கலாம்: மோளேகு வழிபாட்டுக் கூட்டத்தாரின் அக்கினி, பிந்திய குப்பைக் குவியல்களைத் தொடர்ந்து எரித்தலின் பாரம்பரியம் மற்றும் அக்கினி நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பழைய ஏற்பாடு குறிப்பிடும் இடம் (ஏசாயா 30:33; 33:14; 66:24).

இயேசு தமது சீஷர்களிடத்தில், ஒரு சகோதரன் அல்லது சகோதரியை வெறுப்பான வார்த்தைகள் அல்லது செயல்களினால் அழிக்கிற ஒருவருக்குக் கிடைக்கும் தண்டனையைக் காட்டிலும் அதிகம் கொடுமையான தண்டனை வேறு எதுவும் இல்லை என்று நினைவூட்டினார். இயேசு கொடுத்த கடைசி எச்சரிக்கை, "மற்றவர்களைக் கள்ள சீஷர்கள் என்று குற்றம் சாட்டியிருந்த கள்ளசீஷர்களின் அதே வகையினரைப் போன்றே, (இவ்வாறு பிறரின் மனங்களை) புண்படுத்தியவர்கள், தங்களை நித்தியத்திற்கும் அழிவிற்கு

நியமிக்கப்பட்டவர்களாகக் காண்பர்" என்று மறைமுகமாக உணர்த்துகிறது.[8]

**வசனங்கள் 23, 24.** பொதுவான ஒரு கொள்கையைக் கொடுத்திருந்த நிலையில் இயேசு, இரண்டு நடைமுறைப் பயன்பாடுகளைப் பயன்படுத்தினார். அவற்றில் முதலாவதில் அவர், தேவனுக்குக் காணிக்கை செலுத்துவதற்கு முன்னர், ஒருவர் **தமது சகோதரருடன் ஒப்புரவாகுதலின்** முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவரது சீஷர்கள், ஒரு சகோதரரைக் குறித்து தங்கள் இருதயத்தில் தீமையை சிந்திக்கக் கூடாது அல்லது பொல்லாதவற்றை பேசுதலோ கூடாது என்பது மாத்திரம் அல்ல, ஆனால் அவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கு இடையில் நிலவக்கூடிய எந்தப் பிரச்சனையையும் சரிசெய்து கொள்வதற்கு, நேர்மறையான அடிவைப்புகளை எடுத்துவைக்கவும் வேண்டும். இங்கு ஒப்புரவாகுதலின் தொடக்க முயற்சியானது மனதைப் புண்படுத்தியவர்மீது வைக்கப்பட்டு இருக்கையில், மத்தேயு 18:15-17ல் இது புண்பட்டவர்மீது வைக்கப்பட்டுள்ளது. தனிநபர்கள் இப்படிப்பட்ட பிரச்சனைகள் பற்றி அறிந்திருந்து அதைப் பற்றி ஒன்றும் செய்யாமல் இருந்தால், இங்கு சாட்டப்பட்ட குற்றம் வழக்கமாக அவர்களுடையதாக உள்ளது.

எருசலேம் தேவாலயத்தில் தேவனுக்குக் **காணிக்கை செலுத்துதல்** என்ற யூதருடைய நடைமுறையை, இயேசுவின் வழிகாட்டுதல் எடுத்துரைக்கிறது. நியாயப்பிரமாணத்தின்கீழ் பலிகள் என்பவை, பாவியொருவர் தமக்கும் தேவனுக்கும் இடையில் உண்டான ஒரு விதிமீறலைக் குணமாக்கிக் கொள்ளும் வழிமுறையாக இருந்தன. பலிகள் தங்களிலேயே பாவத்திற்கு நிவாரணம் செய்ய இயலாதவையாக இருந்தன (காண்க எபிரெயர் 10:1-4); அவைகள், ஒருவர் செய்த பாவம் குறித்த உண்மையான மனவருத்தம் மற்றும் அது ஏற்படுத்திய விளைவுகளைச் சரிசெய்ய நேர்மையான முயற்சி ஆகியவற்றைத் துணைகொண்டிருக்க வேண்டியிருந்தது. சடங்காச்சாரப் பலிசெலுத்துதல்கள் ஒழுக்கரீதியான தவறுகளுக்குப் பதிலியாக்கப் பட முடியாது என்பதை இயேசு தெளிவாக்கியிருந்தார்.

அங்கேதானே பலிபீடத்தின் முன் **உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், என்ற கட்டளை** உயர் ஒப்புவமையின் அளவைக் கொண்டுள்ளது. "எப்போதும் பணிமும்முரமாக இருக்கும் பலிபீடப் பகுதியில், தானியப்பலி ஒன்றைக்கூடச் செலுத்தாமல் வைத்துப்போவது என்பது நிச்சயமாகவே சாத்தியமற்றதாக இருந்தது. புறாக்களின் ஜோடி ஒன்றையோ அல்லது உயிருள்ள வெள்ளாடு ஒன்றையோ தனியே வைத்துச் செல்லுதல் சாத்தியமற்றதாக இருந்தது!"[9] இத்துடன் கூடுதலாக, புண்பட்டிருந்த சகோதரர் அதே வேளையில் எருசலேமுக்குப் பயணப்பட்டு வந்திருக்கக்கூட மாட்டார். ஒருவர் தேவனுடன் நேராக இருத்தலுக்கு, ஒரு சகோதரருடன் ஒப்புவராக வேண்டியதன் தேவையை அடிக்கோடிடுவதற்காகவே, இயேசு உயர்நவிற்சி அணியைப் பயன்படுத்தினார். "ஒரு மனிதருக்கும் சக மனிதருக்கும் இடையிலான மீறுதல்களுக்கு, அந்த மனிதர் தமது நண்பரின் நற்சிந்தையை மறுபடியும் ஆதாயப்படுத்திக் கொண்டால் மாத்திரமே, பாவநிவாரணநாள் அதற்கு நிவாரணம் செய்கிறது" என்று யூதப்பாரம்பரியம் கூறிற்று.[10] தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாக்கங்களில் ஒன்றான *Didache* என்பது, "ஆனால் உங்களில் எவராவது, உங்கள் பலிகள் தீட்டுப்படாதபடிக்கு [சபைகூடுகையில்] தோழர்களில் ஒருவரோடு சண்டை எதுவும் இட்டிருந்தால், அவர்கள் ஒப்புரவு ஆகாதிருக்கும் அளவுக்கு அந்தச்

*சண்டை இருக்கவேண்டாம் என்று கூறிற்று."*[11]

***வசனங்கள் 25, 26.*** *புண்பட்ட நபர் தமக்குத் தவறு இழைத்திருந்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை உண்மையில் தொடங்கியிருந்த சூழ்நிலை ஒன்று, இயேசு பயன்படுத்திய இரண்டாவது நடைமுறைப்பயன்பாட்டின் சித்தரிப்பாக இருந்தது. இருவரும் நீதிமன்றத்திற்குச் செல்லும்முன்பு, புண்படுத்தியவர் பிரச்சனையைத் தீர்த்துக்கொள்ளும்படி இயேசு பரிந்துரைத்தார்:* **"நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து."** *இந்தச் சூழ்நிலையின் அவசரத்தன்மை வலியுறுத்தப் பட்டுள்ளது, ஏனெனில் ஒப்புரவு இல்லாத நிலையில், விஷயமானது இன்னும் மோசமாவதற்கே அதிகம் வாய்ப்புள்ளது, எதிராளி [குற்றம் இழைத்தவரை]* **நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடுப்பார்.** *குற்றம் செய்ததாகக் கண்டறியப்பட்ட பின்பு, அவர்* **சேவகனிடத்தில்** *ஒப்புக்கொடுத்து கடைசியில்* **சிறைச்சாலையில் வைக்கப்படுவார்.** *தேவன் இஸ்ரவேல் மக்களின் நகரங்கள் யாவற்றிலும் "நியாயாதிபதிகளையும்" "சேவகர்களையும்" நியமிக்கும்படி அறிவுறுத்தி இருந்தார் (உபாகமம் 16:18). சேவகர்கள் நியாயாதிபதிகளின் தண்டனையை நிறைவேற்றினர்.*

*இந்தக் காட்சியில் இடர்ப்பாட்டிற்கு உரிய விஷயமாக இருப்பது நிதிநிலை சார்ந்த ஒன்றாக உள்ளது:* **"பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத்தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்."** *"காசு" (kodrantēs) என்ற வார்த்தை, ரோமநாட்டின் மிகச்சிறு நாணயமான குவாட்ரன்ஸ் என்பதைக் குறித்தது. இது விதவையின் "இரண்டு காசு"க்குச் சமமான மதிப்புடையதாக இருந்தது (மாற்கு 12:42). கடன் வாங்கி [அதை திருப்திச் செலுத்தாமல்] இருந்தால் அதற்காகச் சிறைச்சாலையில் அடைத்தல் என்பது பழங்கால உலகில் புறஜாதியார் மத்தியில் பொதுவான நடைமுறையாக இருந்தது (18:34; லூக்கா 12:57-59). யூதக் காட்சி அமைவில், கடன்வாங்கியவர்கள் தங்கள் கடன்களைத் திருப்திச்செலுத்த, பணம் ஈட்டுவதற்கு வழியெதையும் கொண்டிராத இடமான சிறைச்சாலையில் அடைத்தல் என்ற புறஜாதியாரின் கொடூரமான நடைமுறையைக் குறிப்பிடுதல் என்பது, ஒருவர் தாம் பட்டுள்ள கடன் யாவற்றையும் திருப்பிச் செலுத்துதலின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கும் நிச்சயமான வழியாக உள்ளது. சித்தரிக்கப் படும் நியாயத்தீர்ப்பு பற்றி, கேள்விப்படுபவரின் மனதில் இது செயல்விளைவான எச்சரிப்பு ஒன்றை வைக்கும்.*[12]

## *விபசாரத்தைப் பற்றி (5:27-30)*

***27" 'விபசாரஞ் செய்யாதிருப்பாயாக' என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். 28நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீய இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. 29உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். 30உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும்***

**நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்."**

***வசனம் 27.*** *விபசாரத்தின் உடல்ரீதியான செயல் பாவம் நிறைந்ததாக இருந்தது என்ற யூதத்துவ போதனையை இயேசு ஆதரித்தார். அவரது உரையைக் கேட்டவர்கள், ஏழாம் கட்டளைக்கு நன்கு பழக்கமானவர்களாக இருந்திருக்க வேண்டும்:* **"விபசாரம் செய்யாதிருப்பாயாக"** *(யாத்திராகமம் 20:14; உபாகமம் 5:18). விபசாரம் செய்தல் என்பது, மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் பாவம் நிறைந்ததாக இருந்தது. மற்றும் இது கிறிஸ்துவின் பிரமாணத்தின்கீழும் பாவம் நிறைந்ததாகவே உள்ளது. பழைய உடன்படிக்கையில் இந்தச் செயல் உடல்ரீதியான மரணம் என்ற தண்டனையைப் பெற்றது (லேவியராகமம் 20:10; உபாகமம் 22:22), மற்றும் இது புதிய உடன்படிக்கையின்கீழ் ஆவிக்குரிய மரணம் என்ற தண்டனையைப் பெறுகிறது (1 கொரிந்தியர் 6:9; வெளிப்படுத்தின விசேஷம் 21:8; 22:15).*

***வசனம் 28.*** *இருப்பினும் விபசாரத்திற்கு எதிரான கட்டளையை இயேசு, பழைய உடன்படிக்கை செய்திருந்ததைக் காட்டிலும் தூரத்திற்கு எடுத்துச் சென்றார்:* **"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று."** *யூத ரபீக்களில் சிலர், இடல்ரீதியான செயலைப் பாவம் நிறைந்ததாக எண்ணி, ஆனால் காமத்தை அனுமதிக்கக் கூடியதாக்கிய வேளையில், இயேசு விபசாரம் என்ற அந்த செயலுக்கு முந்திய சிந்தனையும் பாவமாக இருந்தது என்று அறிவித்தார்.*[13]

*மற்ற யூத போதகர்களும் இயேசுவைப் போன்றே காமத்தை எதிர்த்து நின்றனர். உதாரணமாக, பிந்திய ஆதாரமூலம் ஒன்று, "தமது உடலைக் கொண்டு குற்றம் செய்துள்ளவர்தாம் விபசாரக்காரர் என்று அழைக்கப்படுகிறார் என்று நீங்கள் யூகித்துவிடக்கூடாது. அவர் தமது கண்களைக் கொண்டு விபசாரம் செய்தால், அவரும் விபசாரக்காரர் என்றே அழைக்கப்படுவார்" என்று கூருகிறது.*[14] *பின்வரும் எச்சரிக்கை தள்ளுபடி ஆகமத்தில் காணப்படுகிறது. "அழகான பெண்ணிடமிருந்து உன் கண்களைத் திருப்பிக்கொள்; பிறன் மனைவியின் அழகை உற்று நோக்காதே. பெண்களில் அழகால் பலர் நெறிபிறழ்ந்துள்ளனர்; இதனால் காமம் தீயெனப் பற்றி எரியும்."*[15]

*மற்ற பாவங்களைப் போன்றே, காமத்தின் பாவமும் அதன் தொடக்கத்திலேயே கொல்லப்பட வேண்டும். காமம் நிறைந்த பார்வையானது காமம் நிறைந்த செய்கைக்கு வழிநடத்தக்கூடும். "பார்வைகள்" என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை, தொடர்ந்து கண்ணோக்கும், நிலையான விருப்பம் நிறைந்த பார்வையைச் சுட்டிக்காண்பிக்கிறது. இது, காமம் நிறைந்த பார்வை கவர்ச்சி ஏற்படுத்துதல் மற்றும் சிந்தனையில் சட்டப்பூர்வமற்ற உறவுகளில் மனதளவில் ஈடுபடுதல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது (காண்க 2 பேதுரு 2:14; 1 யோவான் 2:16). பெண்ணின் ஈர்ப்புத்தன்மை பற்றிய மனிதரின் பாராட்டுதலை இயேசு கண்டனம் செய்யவில்லை. "ஒரு ஆண் ஒரு பெண்ணின்மீது கொள்ளும் இயல்பான விருப்பம் அல்ல, ஆனால் ஒருவர் தமக்கு உரிமை இல்லாத ஒரு பெண்ணின்மீது கொள்ளும் காமம் நிறைந்த விருப்பமே இங்கு கண்டனம் செய்யப்படுகிறது."*[16]

*பத்சேபாள் குளித்துக் கொண்டிருக்கையில், தாவீது காமம் நிறைந்த பார்வையுடன் தொடங்கியதான, தாவீது மற்றும் பத்சேபாள் ஈடுபட்ட கள்ள உறவு என்பது, பழைய ஏற்பாட்டில், விபசாரத்திற்கு பிரபலமான உதாரணமாக உள்ளது (2 சாமுவேல் 11:2-4). குற்றமற்ற மனிதரான யோபு ஒரு காலத்தில், "என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?" என்று உறுதிப்படுத்தியிருந்தார் (யோபு 31:1). தொடர்ந்து அவர், திருமணம் ஆன பெண் ஒருத்தியினால் தாம் மயக்கப்படுவதற்கு எதிராகத் தமது இருதயத்தைக் காத்திருந்ததாகவும், உடன்படும் சூழ்நிலைகளில் இருந்து தம்மை விலக்கி வைத்திருந்ததாகவும் கூறச் சென்றார் (யோபு 31:9-12).*

*காமம் என்பது மனதளவிலான கற்பழிப்பு என்பதை இயேசுவின் வார்த்தைகள் மறைமுகமாக உணர்த்துகின்றன. மக்கள், மனதளவிலோ அல்லது உடல்ரீதியாகவோ, நமது சொந்த சந்தோஷத்திற்காகப் பயன்படுத்தப்படும் பொருள்களாக இருப்பதில்லை. பாலுறவைத் தவறாகப் பயன்படுத்துதல் என்பது, தேவன் நமக்கு அருளிய கொடைகளில் ஒன்றைப் பிறழ்வுபடுத்துதலை அடக்கியுள்ளது. பாலுறவு உணர்வு வெளிப்பாடுகளின் முழுமையான மகிழ்வு அனுபவம், அதைக் குறித்துத் தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவதினால் மாத்திரமே காணப்பட முடியும்.*

***வசனங்கள் 29, 30.** பாவம் என்பது, அதன் தொடக்க நிலையிலேயே நீக்கிப்போடப்பட வேண்டும். இது அவ்வளவு தீவிரமான விஷயமாக இருப்பதால், மனரீதியான விபசாரம் எவ்வாறு தவிர்க்கப்பட முடியும்? இயேசு, **"உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு"** என்று கூறினார். ராபர்ட் H. மவுன்ஸ் அவர்கள், "இடறுதலைத் தவிர்ப்பதாக யூகிக்கப்படும் கண்ணே, ஒருவர் இடறுதலுக்குக் காரணமாகிறது என்பது நேர்மாறானதாக உள்ளது" என்று குறிப்பிட்டார்.[17]*

*சபையின் தொடக்க நாட்களில், இயேசுவின் இந்தக்கூற்று அவ்வப்போது நேர்ப்பொருளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அதுபோன்றே, "தொடக்க கால சபைப் பிதாக்களில்" ஒருவரான ஓரிகன் (c. 185-254) அவர்கள், மத்தேயு 19:12ல் உள்ள கிறிஸ்துவின் போதனையின் அடிப்படையில் தம்மைத்தாமே அண்ணகராக்கிக் கொண்டவர் என்று கூறப்படுகிறது.[18] இருப்பினும் உடல் உறுப்புகளை துண்டித்துக் கொள்ளுதலை இயேசு பரிந்துரைக்கவில்லை; அவர் தமது கருத்தை நிலைநாட்டுவதற்கு, உயர்வுநவற்சி அணியை, அல்லது மிகைப்படுத்திக் கூறுதலைப் பயன்படுத்தினார். 29 மற்றும் 30 ஆகிய வசனங்களில் அவர் உறுப்பு நீக்கத்தைக் கட்டளையிடவில்லை, ஆனால் தம்மைப் பின்பற்றுபவர்கள், தங்கள் வாழ்வில் பாவம் நிறைந்த தன்மையை விட்டு விலக வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் இயல்பான இச்சைகளைக் கட்டுப்படுத்தத் தேவையான எந்த நடவடிக்கையையும் எடுத்தலின் அவசியத்தை இந்த உருவகம் வலியுறுத்துகிறது.[19]*

*இயேசு, **"உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு"** என்றும் கூறினார். "கண்" மற்றும் "கை" என்ற இரு விஷயங்களிலும், "வலது" என்பது இங்கு குறிப்பிடப்பட்டு உள்ளது. வலது கையானது அதிகம் ஓங்கியதாகக் கண்ணோக்கப்பட்டதால், அது சாதகமான கை என்று கருதப்பட்டது. இந்த விசேஷித்த கவனித்தல் இயேசுவினால் கண்ணுக்கும்*

மாற்றப்பட்டது.

வலியுறுத்துதலுக்காக இயேசு பின்வரும் எச்சரிக்கையை இருமுறை கொடுத்தார்: "உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்." மத்தேயு 18:8, 9ல் மற்றும் கை மாத்திரமல்ல ஆனால் காலையும் உள்ளடக்கிய, இதேபோன்ற கூற்றுக்களை இயேசு ஏற்படுத்தினார். அவ்வசனங்களில் அவர், "நீ இரண்டு கையுடையவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் ... இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" என்று கூறிமுடித்தார். ஜேக் P. லூயிஸ் அவர்கள், "உயர்வுநவிற்சி மிகைக்கூற்று என்பது, ஊனமற்ற தன்மை இனிவரும் உலகத்திலும் தொடருமா இல்லையா என்பதன்மீதான ரபீத்துவ வழக்காடுலின் வெளிச்சத்தில், அதிகம் கூர்மையானதாக உள்ளது" என்று நினைத்தார்.[20]

பிற்பாடு இயேசு, பாவம் யாவும் இருதயத்தில் இருந்தே தோன்றுகிறது என்று கூறினார் (15:18-20). இருதயம் என்பதே திறவுகோல் சிந்தனையாக உள்ளது. மத்தேயு 5:28ல் அவரது குறிப்புரைகள், காம இச்சையுடன் ஒரு பெண்ணை பார்க்குதல் மாத்திரம் பிரச்சனையல்ல என்பதை நிரூபிக்கிறது. அது கண்ணின் பிரச்சனையாக இருப்பதில்லை, ஆனால் இருதயத்தின் பிரச்சனையாக உள்ளது. காமம் நிறைந்த பார்வை பாவத்தை உருவாக்குவதில்லை, ஆனால் இருதயத்தில் ஏற்கனவே பாவம் நிலவுதல் என்பது காமம் நிறைந்த பார்வைக்குக் காரணமாகிறது. இயேசுவின் கட்டளையை நேர்ப்பொருளில் ஒருவர் எடுத்துக்கொண்டார் என்றால், கண்களை மாத்திரம் பிடுங்கி ஏறிதல் அல்லது கையை மாத்திரம் வெட்டிக்கொள்ளுதல் என்பதற்கு மாறாக, தலையை வெட்டிப்போடுதல் என்பதே அதிகம் கருத்துணர்வை ஏற்படுத்துவதாக இருக்கும். மூளைதான் கண்ணையும் கையையும் கட்டுப்படுத்துகிறது. ஒரு நண்பரின் கண்கள் அல்லது கைகள், அவர் இடறுவதற்குக் காரணமாகிறது என்றால், அவர் தவறான சிந்தனையும் தவறான விருப்பங்களையும் நிறுத்திக்கொள்ளும்படி தமது மூளைக்குக் கட்டளையிட வேண்டும்.

## திருமண முறிவு பற்றி (5:31, 32)

***[31]"தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. [32]நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் வேசித்தனமுகாந்திரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளுவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்."***

***வசனம் 31.*** திருமண முறிவைப் பற்றிப் பேசியதில் இயேசு மீண்டும், நியாயப்பிரமாணத்தின் ஆவியைப் புறக்கணித்திருந்த யூதத்துவ விளக்கங்களைக் கையாண்டார். இங்கு கேள்வியில் உள்ள குறிப்பிட்ட சட்டம், உபாகமம் 24:1-

*4ல் இருந்து எடுக்கப்பட்டுள்ளது:*

> *“ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம். அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையில் கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷனும் இறந்துபோனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணாயாக”* [என்னால் வலியுறுத்தப்படுகிறது].

இவ்வசனப்பகுதி, விரிவாக்கப்பட்ட நிபந்தனை வாக்கியமாக உள்ளது. முதல் மூன்று வசனங்கள் (“ஆல்” பகுதியாகிய) நிபந்தனையைக் கொண்டுள்ளன, மற்றும் நான்காவது வசனம் (“பின்பு” பகுதியாகிய) பின்விளைப் பகுதியாக உள்ளது.[21] இது திருமண முறிவுக்கான *கட்டளையல்ல*, ஆனால் (ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருந்த) திருமண முறிவை முறைப்படுத்துதலாக உள்ளது. திருமண முறிவு பெற்று மறு திருமணம் செய்துகொண்ட ஒரு பெண், தனது முதல் கணவரால் திரும்ப ஏற்றுக்கொள்ளப்படக் கூடாதவளாக இருந்தாள். கிறிஸ்டோபர் ரைட் அவர்களின் கூற்றுபடி, “பொறுப்பற்ற ஆண்களுக்கு இடையில் அங்கும் இங்குமாக உதைத்துத் தள்ளப்பட்டு, திருமண வகையில் கால்பந்து ஆகிவிடாதபடி, துரதிர்ஷ்டவசமான பெண்ணைப் பாதுகாத்தல், என்பதே இந்த சட்டத்தின் நடைமுறை செயல்விளைவாக உள்ளது.”[22] இவ்வசனப்பகுதியைப் பற்றி மக்களின் இருதயங்கள் கடினமாகி இருந்த காரணத்தினால்தான், திருமண முறிவை மோசே *அனுமதித்திருந்தார்* என்று இயேசு கூறினார் (19:8).

**“தன் மனைவியைத் தள்ளுவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன்”** என்ற கூற்று, உபாகமம் 24:1ன் அடிப்படையில் அமைந்திருந்தாலும், இது ஒரு நேரடியான மேற்கோளாக இருப்பதில்லை. உபாகமத்தில் இருந்து வருகிற வசனப்பகுதியில், திருமண முறிவுச் சீட்டு யூகிக்கப் பட்டுள்ள வேளைகளில், இந்தக் கூற்று அதைக் கொடுத்தலை ஒரு கட்டளை என்ற வகையில் முன்வைக்கிறது (காண்க 19:7).

“திருமண முறிவுச்சீட்டு” என்பது, “துண்டித்தலின் சீட்டு” “விலக்கிவைத்தலின் சீட்டு,” “ஒரு கருவி,” “நீக்குதலின் கருவி” மற்றும் “கைவிடுதலுக்கான கடிதம்” என்று அறியப்பட்டுள்ளது.[23] திருமண முறிவிற்கான சீட்டு என்ற வழக்கம், ஒரு கணவர் தமது மனைவியை, கோபத்தின் உச்சியில் அவசரமாக அனுப்புதலில் இருந்து அவரைத் தடைசெய்தது, இது ஒரு பெண், விபசாரி என்ற வகையில் கண்ணோக்கப்படுவதில் இருந்து அவளைப் பாதுகாக்கவும் இன்னொரு ஆணைத் திருமணம் செய்து கொள்வதற்கு அவளைச் சுயாதீனம் உள்ளவளாக்கவும் செய்தது.

முதல் நூற்றாண்டு யூதத்துவத்தில், திருமண முறிவு என்பது ஆணுக்கு உரிய விஷயமாக இருந்தது;[24] மற்றும் ஆண்கள் தங்கள் மனைவிகளை "எந்த முகாந்திரத்தினாலாகிலும்" (19:3) திருமண முறிவு செய்வதில் அடிக்கடி தங்களையே நீதியுள்ளவர்களாக உணர்ந்தனர். யோசிப்பஸ் அவர்கள், பின்வருமாறு எழுதினார்:

> எந்தக் காரணத்தாலாகிலும் தமது மனைவியிடம் இருந்து திருமண முறிவு கொண்டவராயிருக்க விரும்புவோர் (மற்றும் இதுபோன்ற பல விஷயங்கள் ஆண்கள் மத்தியில் நடக்கின்றன), அந்தப் பெண்ணை இனியும் ஒருக்காலும் தமது மனைவி என்ற வகையில் பயன்படுத்த மாட்டார் என்ற உறுதிப்பாட்டை எழுத்தில் தரட்டும்; ஏனெனில் இந்த வழியினால் அந்தப் பெண் இன்னொரு கணவரை திருமணம் செய்துகொள்ள விடுதலையாய் இருப்பார்.[25]

இருப்பினும், இந்த மனநிலைக்கு எல்லாரும் கருத்து ஒருமித்துப் போவதில்லை. ரபீத்துவப் பள்ளிகளில் இரண்டு, "இலச்சையான" என்ற வார்த்தையின் அர்த்தத்தின்மீது கவனம் குவித்து, இவ்விஷயத்தைப் பற்றி உக்கிரமாக விவாதித்தன - உபாகமம் 24:1ல் உரைக்கப்பட்டுள்ள இவ்வார்த்தை "ஒரு விஷயத்தின் நிர்வாணத்தன்மை" என்று நேரடி அர்த்தம் கொண்டுள்ளது.[26] ஷம்மாய் ரபீ, மிகவும் பழமைவாத நிலைப்பாட்டை மேற்கொண்டு, "இலச்சையான" என்பது கற்பற்றதன்மையாக இருந்தது என்று கூறினார். இருப்பினும் இது முழுமையான விபசாரம் என்பதாக இராதிருக்கலாம். ஏனெனில் விபசாரம் செய்தவர் நியாயப்பிரமாணத்தின்படி மரண தண்டனையின்கீழ் இருக்க முடியும் (லேவியராகமம் 20:10-14; உபாகமம் 22:22). ஹில்லெல் ரபீ, மிகவும் சுதந்தரமான/தாராளமான கண்ணோக்கை மேற்கொண்டு, "இலச்சையான" என்பது அடிப்படையில், கணவரை பிரியப்படுத்தாத அல்லது எரிச்சல் மூட்டும் எந்த விஷயமாகவும் இருந்தது "அவர் உணவை சரியாக சமைக்கவில்லை என்றாலும் கூட" என்று கூறினார்.[27] எதிர்பார்க்கப்படுகிறபடி, ஹில்லெல் அவர்களின் அதிகம் தாராளமான கண்ணோக்கு மக்கள் மத்தியில் பிரபலமானதாக இருந்தது.

**வசனம் 32.** தமது மனைவியை - திருமண முறிவுச்சீட்டு கொடுத்தும்கூட - புறம்பே தள்ளிவைக்கும் மனிதர், அவள் பாவம் செய்யக்காரணம் ஆகிறார். அவர், **"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ... தன் மனைவியைத் தள்ளுவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்"** என்று குறிப்பாக உரைத்தார். "எந்த முகாந்திரத்தினாலாகிலும்" விவாகரத்துச் செய்யச் சுதந்தரமாக இருத்தலில் இருந்து வெகுதொலைவில், ஒரு கணவர் தமது திருமண உடன்படிக்கைக்கு உண்மைநிறைந்தவராக இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார்.

ஷம்மாய் ரபீயின் போதனையைக் கைக்கொண்டவர்களுக்கு நெருக்கமாக இருந்த அவரது (இயேசுவின்) போதனை, அவரது நாட்களின் நடைமுறையைக் காட்டிலும் கண்டிப்பானதாக இருந்தது. தேவனுடைய தோற்றகால விருப்பநோக்கத்தின்படி, திருமணத்தின் பரிசுத்தம் மற்றும் நிரந்தரத்தன்மை ஆகியவற்றை மீளக்கட்டுவித்தல் என்பதே அவரது முழுமையான

நோக்கமாக இருந்தது (ஆதியாகமம் 2:18-25; மல்கியா 2:13-16; மத்தேயு 19:4-6, 9). ஹேக்நர் அவர்கள், "இராஜ்யத்தின் நீதியினுடைய அடிப்படைப் பண்பானது, ஏதேன் தோட்டத்தின் தர அளவைகளுக்குத் திரும்பும்படி வற்புறுத்துகிறது" என்று குறிப்பிட்டார்.[28] W. F. ஆல்பிரைட் மற்றும் C. S. மேன் ஆகியோர், திருமண உடன்படிக்கையின் கட்டுப்படுத்தும் இயல்பிற்கு திரும்பிச்சென்றார் என்ற வகையில் இயேசுவைச் சுட்டிக்காண்பித்தனர்:

> திருமணத்தின் கொள்கை மற்றும் அஸ்திபாரம் ஆகியவற்றையே இயேசு வலியுறுத்தினார். கொள்கை அளவில், விவாகரத்துச் செய்யப்பட்ட பெண் இன்னமும் தனது கணவரின் மனைவியாகவே இருக்கிறாள், மற்றும் தமது மனைவியை விவாகரத்துச் செய்யும் மனிதர், அவள் மீண்டும் திருமணம் செய்துகொள்ளுவாள் என்ற யூகத்தினால், அவளை ஒரு விபசாரி ஆக்குகிறார். விவாகரத்துப் பெற்ற பெண்ணைத்திருமணம் செய்துகொள்ளும் மனிதர் அவளது விபசாரத்தில் பங்கேற்று அவர்தாமே அந்தக் குற்றத்தைச் செய்கிறார், ஏனெனில் - சட்டப்பூர்வமாக இல்லாவிட்டாலும் - கொள்கையளவில், விவாகரத்துப் பெற்ற பெண் இன்னமும் தமது முதல் கணவருடன் திருமணம் ஆனவளாகவே இருக்கிறாள்.[29]

இப்படிப்பட்ட விஷயங்களில், விவாக ரத்துப் பெற்ற பெண், முதல் நூற்றாண்டுக் காலத்தில் தனது கலாச்சாரத்தில் தனித்திருந்து வாழுதல் என்பது மிகவும் கடினமானதாக இருந்தது என்பதால், அவள் மறுதிருமணம் செய்துகொள்வாள் என்று இயேசு யூகித்தார்.

இருப்பினும் பொதுவான விதிக்கு இயேசு பின்வரும் விதிவிலக்கைத் தந்தார்: **"வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயின்றி"** (காண்க 19:9). இவ்விடத்தில் ஆங்கில வேதாகமத்தில் "unchastity" என்றுள்ளது, இது *porneia* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது, இவ்வார்த்தை "வேசித்தனம்" என்றும் (KJV) "திருமணவாழ்வில் உண்மையற்ற தன்மை" என்றும் (NIV) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பப்பொருளில், இச்சொற்றொடர், சட்டவிரோதமான பாலுறவின் எல்லா வகைகளையும் உள்ளடக்கும் விரிவான குடையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஒரு மனிதரின் மனைவி விபசாரம் செய்திருந்தால், அவளை விவாகரத்துச் செய்வதால் அந்த மனிதர் குற்றப்படமாட்டார் என்பதே கருத்தாக உள்ளது.[30] இந்த விதி விலக்குக் கூறு, மனிதர்கள் உண்மையற்ற தங்கள் மனைவியரை விவாகரத்துச் செய்ய *அனுமதித்தது*, ஆனால் அவ்வாறு செய்யும்படி அவர்களுக்கு *கட்டளையிடவில்லை*. ஒருவேளை, பெண்ணின் மனந்திரும்புதலும் அத்துடன் இணைந்த அம்மனிதரின் மன்னிப்பும், திருமண வாழ்வை மீளக்கட்டுவித்தலுக்கு வழிநடத்தக் கூடும். இதற்கு நேர்மாறாக, ரபீத்துவச் சட்டத்தின்படி, ஒரு மனிதர் தூய்மையற்ற தமது மனைவியை, அவள் அசுத்தமானவள் என்று கருதப்பட்டதால், விவாகரத்துச் செய்தே ஆக வேண்டியிருந்தது.[31]

இவ்வசனத்திலும் இதன் இணைவசனங்களிலும் (19:1-12; மாற்கு 10:1-12; லூக்கா 16:18), இயேசு விவாகரத்திற்கு எதிராகப் போதித்தார். இருப்பினும், 1 கொரிந்தியர் 7ல் பவுலினால் விளக்கமாக உரைக்கப்பட்ட சில விபரங்களை, இயேசு வெளிப்படையாகக் கலந்துரையாடவோ அல்லது தெளிவுபடுத்தவோ இல்லை.

## ஆணையிடுதல்கள் பற்றி (5:33-37)

**[33]“ ‘அன்றியும் பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக’ என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். [34]நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். [35]பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். [36]உன் சிரசின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாகவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. [37]உள்ளதை உள்ளதென்றும், ‘இல்லதை இல்லதென்றும்’ சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.”**

*__வசனம் 33.__ ஆணையிடுதல் பற்றிய இந்தப் போதனையை இயேசு, 21ம் வசனத்தில் காணப்படும் முழுமையான விதிமுறைகளுடன் அறிமுகப்படுத்தினார்:* **“... என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.”** *பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட வசனப்பகுதியில் இருந்து மேற்கோள் காண்பிப்பதற்குப் பதிலாக அவர், அதன் போதனையைப் பின்வரும் தலைப்பின்கீழ் தொகுத்துரைத்தார்: “ ‘பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக.’ ” எல்லாப் பொருத்தனைகளையும் ஆணைகளையும் அல்ல, ஆனால் பொய்யான பொருத்தனைகள் மற்றும் ஆணைகளையே நியாயப்பிரமாணம் கண்டனம் செய்தது. உண்மையில் அது (நியாயப்பிரமாணம்) குறிப்பிட்ட சூழ்நிலைகளின்கீழ் ஆணையிடுதல்களை கேட்டுக்கொண்டது (யாத்திராகமம் 22:10-13; எண்ணாகமம் 5:16-22). மற்றும் அது, மக்கள் தங்கள் ஆணையிடுதல்களை, புறதெய்வங்களின் பெயரால் இடுவதற்கு மாறாக, தேவனுடைய நாமத்தில் இடும்படி கட்டளையிட்டது (உபாகமம் 6:13, 14; 10:20). இருப்பினும் நியாயப்பிரமாணம் தேவனுடைய நாமத்தை வீணாக உச்சரிப்பதற்குச் சமமான, பொய்யான பொருத்தனைகள் மற்றும் ஆணைகளை இடுதலின் பயங்கரமான விளைவுகளை அறிவித்தது (யாத்திராகமம் 20:7, 16; லேவியராகமம் 19:11, 12; எண்ணாகமம் 30:2; உபாகமம் 5:11; 19:15-20; 23:21-23).*

*__வசனங்கள் 34, 35.__ மீண்டும் ஒருமுறை இயேசு. ஒருவேளை உயர்வுநவிற்சி அணியின் அளவுடன், ஆணையிடுதல்கள் யாவற்றையும் தடைசெய்தார்:* **“நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்.”** *இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள், தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தனர், ஆனால் அவர்கள்* **வானம், பூமி, எருசலேம்,** *தேவாலயம், தேவாலயத்தில் இருந்த பொன், பலிபீடம், பலிபீடத்தின் மேலிருந்த பலி, பலிபீடத் தட்டுமுட்டு ஜாமான்கள் மற்றும் இப்படிப்பட்ட பிறவற்றின் மீது சத்தியம் செய்வார்கள்.[32] இருப்பினும், இந்த ஆணையிடுதல்கள் யாவற்றையும் காத்துக்கொள்ளும்படி தாங்கள் கட்டாயப்படுத்தப் பட்டதாக அவர்கள் நம்பவில்லை. மத்தேயு 23:16-22ன் படி, தேவாலயத்தில் உள்ள பொன்னின்மீதோ அல்லது பலிபீடத்தின் மேல் இருந்த பலியின்மீதோ ஒருவர்*

ஆணையிட்டால், அவர் அதற்குக் கடமைப்பட்டவராக இருக்கிறார் என்றும், ஆனால் தேவாலயத்தின்மீதோ அல்லது பலிபீடத்தின்மீதோ ஆணையிட்டால் அதற்குக் கடமைப்பட்டவராக இருப்பதில்லை என்றும் யூதர்கள் நம்பினர். ஒருவர் வானத்தின்மீது மற்றும் பூமியின்மீது ஆணையிட்டால், அவற்றில் இருந்து அவர் விதிவிலக்கு அளிக்கப்படுகிறார், ஆனால் தேவன்மீது ("அதோனாய்," "யாவே" அல்லது "சர்வ வல்லவர்" என்பதைப் பயன்படுத்தி) அல்லது தேவனுக்கு ("இரக்கமும் கிருபையும் உள்ளவர்" என்பது போன்ற) மங்கல வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி ஆணையிட்டால், அதற்குக் கட்டப்பட்டிருக்கிறார் என்று மிஷ்னாவில் கூறப்பட்டுள்ளது.[33]

இப்படிப்பட்ட நடக்கைகளின் மாய்மாலத்தை, இயேசு பழித்துரைத்து, எல்லா ஆணைகளும் கட்டுப்படுத்துபவையாக இருந்தன என்று உறுதிப்படுத்தினார். யூதர்கள் எப்போதுமே தேவனுடைய நாமத்தில் ஆணையிடுவதில்லை என்றிருக்கையில், அவருடன் உடனடித் தொடர்பு கொண்டிருந்த பொருள்களின் மீது அவர்கள் ஆணையிட்டனர். "வானம்" **தேவனுடைய அரியணையாக உள்ளது,** மற்றும் "பூமி" **அவரது கால்மனையாக உள்ளது** (ஏசாயா 66:1). மேலும், "எருசலேம்" என்பது **மகாராஜாவின் நகரமாக உள்ளது** (சங்கீதம் 48:2), மற்றும் "தேவாலயம்" என்பது அவரது வாசஸ்தலமாக உள்ளது (23:21). அவர்கள் தங்கள் ஆணைகளை முறிப்பதின் மூலமாக, உண்மையில் மறைமுகமாகத் தேவனுடைய நாமத்தை மாசுபடுத்தினர்.

**வசனம் 36.** (வானம், பூமி, எருசலேம் என்ற) இறங்குவரிசை முறைமையானது, தனித்தனி நபருடன் முடிவடைகிறது: **"உன் சிரசின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம்."** "உங்கள் தலையின் வாழ்வினால்" ஒரு ஆணையை மேற்கொள்ளுதல் பற்றி மிஷ்னா குறிப்பிடுகிறது, மற்றும் அதற்கு மாறாகப் பேச முடியுமா இல்லையா என்பது பற்றி ரபீக்கள் விவாதித்தனர்.[34] மனிதரின் பலவீனத்தினாலேயே இப்படிப்பட்ட ஆணையிடுதல்கள் உண்டாகின்றன என்று இயேசு குறிப்பிட்டார்: **"உங்கள் தலைமுடியில் ஒன்றையாவது வெள்ளையாக்கவோ அல்லது கறுப்பாக்கவோ உங்களால் முடியாதே."** இதற்கு நேர்மாறாக, ஒரு நபரின் தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கையைக்கூட அறிந்துள்ள தேவன், மனிதகுலத்தின்மீது இராஜரீகமான கட்டுப்பாட்டைப் பற்றிக்கொண்டுள்ளார் (10:30).

**வசனம் 37.** இயேசு தமது சீஷர்களுக்கு, " **'உள்ளதை உள்ளதென்றும்' 'இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்'** " என்று புத்திகூறினார். NIV வேதாகமத்தில், "உங்கள் 'ஆம்' என்பது 'ஆம்' என்றும் உங்கள் 'இல்லை' என்பது 'இல்லை' என்றும் மாத்திரம் இருக்கட்டும்" என்றுள்ளது. எளிமையாகவும் உண்மைநிறைந்த வகையிலும் பதில்கூறும்படி தமது சீஷர்களுக்கு இயேசு அறிவுறுத்தினார் (காண்க 2 கொரிந்தியர் 1:17-24; யாக்கோபு 5:12). தனிநபர் ஒருவர் எப்போதுமே உண்மை கூறுகிறார் என்றால், ஆணையிடுதல்கள் அவசியமற்றவை ஆகின்றன.

பொருத்தனைகள் மற்றும் ஆணையிடுதல்கள் பற்றிய இயேசுவின் எண்ணப்போக்கு, எஸ்ஸெனஸ்கள் என்ற பிரிவினரால் பகிர்ந்துகொள்ளப் பட்டது. அவர்களைக் குறித்து யோசிப்பஸ் பின்வருமாறு எழுதினார்:

> அவர்கள் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் மேலோங்கி இருந்தனர், மற்றும் அவர்கள் சமாதானத்தின் ஊழியர்களாக இருந்தனர்; அவர்கள் கூற்றுக்களும் கூட, ஆணையிடுதலைக் காட்டிலும் உறுதியானவையாக இருந்தன; ஆனால் சாபம் இடுதல் என்பது அவர்களால் தவிர்க்கப் பட்டிருந்தது, மற்றும் அதை அவர்கள், பொய்ச்சாட்சி கூறுவதைக் காட்டிலும் மிகவும் மோசமானதாக மதித்தனர், ஏனெனில் தேவன் [நாமத்தினால் ஆணையிடுதல்] இன்றி நம்ப இயலாதிருக்கிறவர் ஏற்கனவே கண்டனம் பண்ணப்பட்டார் என்று அவர்கள் கூறுகின்றனர்.[35]

இருப்பினும், எஸ்ஸென்ஸ் பிரிவிற்குள் அனுமதிக்கப்பட்டவர்கள், ''தேவன்மீது பயபக்தி'' மற்றும் ''மனிதர்களிடத்தில் நியாயம் செய்தல்'' ஆகியவற்றைக் குறித்து ''மாபெரும் ஆணையிடுதல்கள்'' ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர்.[36]

இயேசு, "இதற்கு [எளிமையான "ஆம்" அல்லது "இல்லை" என்பதற்கு] அப்பாற்பட்டது தீமையினால் உண்டாயிருக்கும்" என்று கூறினார். "தீமை" என்ற கிரேக்க பெயர் உரிச்சொல், "தீமையான ஒருவன்" என்ற வகையிலும் உறுதியாகப் புரிந்துகொள்ளப்பட முடியும் (5:37; 6:13; 13:19, 38). யூதர்கள் தங்கள் ஆணையிடுதல்களில் வஞ்சித்தல் என்பது "பொய்க்குப் பிதாவாயிருக்கிற" (யோவான் 8:44) பிசாசானவனிடம் இருந்து வந்தது. இயேசுவின் சீஷர்கள் பிதாவின் நேர்மைத் தன்மையைப் போலச் செய்ய வேண்டும் என்று இயேசு விரும்பினார் (5:48). மற்றும் அவர்கள், "சத்தியம்" என்று விவரிக்கப்பட்ட (யோவான் 14:6) இயேசுவைப் பின்பற்ற வேண்டும், "அவரது வாயில் வஞ்சனை எதுவும் காணப்படவில்லை" (1 பேதுரு 2:22).

குறிப்பிட்ட விதி என்பதற்கு மாறாக, ஆணையிடுதல்களை இயேசு பொதுவாகவே தடைசெய்தாரா? 5:34, 37ல், இயேசுவின் கூற்றுக்கள், அவரது உரையைக் கேட்டவர்கள் மீது செயல்தாக்கத்தை ஏற்படுத்தும்படிக்கு, உயர்வு நவிற்சியாக இருக்க வேண்டும். கிறிஸ்துவை ஒரு ஆணையிடுதலின்கீழ் ("ஜீவனுள்ள தேவன்மேல் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்"; 26:63, 64) கேட்ட பிரதான ஆசாரியருக்கு, கிறிஸ்து பதில் அளித்தார் என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதே. ஏவுதல் பெற்ற பவுலின் நிருபங்களில், உண்மைநிறைந்த ஆணையிடுதல்கள் காணப்படுகின்றன (ரோமர் 1:9; 1 கொரிந்தியர் 15:31; 2 கொரிந்தியர் 1:23; கலாத்தியர் 1:20; பிலிப்பியர் 1:8; 1 தெசலோனிக்கேயர் 5:27). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தேவன் ஒரு ஆணையினால் உறுதிப்படுத்தினார் என்றுகூட உரைத்தார் (எபிரெயர் 6:17, 18).

## பழிவாங்குதல் பற்றி (5:38-42)

**[38]"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். [39]நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. [40]உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை**

**எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு, [41]ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. [42]உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே."**

***வசனம் 38.*** *இயேசுவினால் இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்ட -* ***"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்"*** *என்ற - மேற்கோள், பழைய ஏற்பாட்டில் இருந்து வருகிறது (யாத்திராகமம் 21:24; லேவியராகமம் 24:20; உபாகமம் 19:21). இது அடிக்கடி, lex talionis அல்லது எதிர்த்துத் தாக்குதலின் பிரமாணம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. பழைய பாபிலோனிய இராஜ்யத்தின் (c. கி.மு. 1800) புகழ்பெற்ற அரசராக இருந்த, ஹம்முரபியின்[37] சட்டக்கோட்பாட்டில் இவ்வகையான சட்டமுறைமை முதன்முதலாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. முதலில் இது காட்டுமிராண்டித் தனமானதாகவும் கொடூரமானதாகவும் காணப்பட்டிருக்கையில், உண்மையில் இது இரக்கத்தின் சட்டமாகவே இருந்தது. முதலாவது இது, கொடுக்கப்பட வேண்டிய தண்டனையைக் காட்டிலும் அதிகமான தண்டனை தருவதில் இருந்து ஒரு நபரைத் தடுத்தது. இரண்டாவது இது, அலைந்து திரியும் விழிப்பாளர்கள், தகுதியானதென்று தாங்கள் கருதும் எந்த தண்டனையையும் தந்து "நீதியை" நிலைநாட்டுவதில் இருந்து அவர்களைத் தவிர்த்தது (லேவியராகமம் 19:18; நீதிமொழிகள் 20:22; 24:29). மோசேயின் நியாயப்பிரமாணத்தில், உரியவகையில் தண்டித்தல் என்பது சட்டநடவடிக்கையைச் செயல்படுத்தும் நிர்வாகத்துடன் மாத்திரம் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. தக்க வகையிலான சட்டப் பாதுகாப்புகளுடன், முடிவுகள் வெளியரங்கமாகத் தரவழைக்கப்பட்டன (உபாகமம் 19:15-21). ஒரு நபரைத் தீர்ப்புக்குள்ளாக்குவதற்கு முன்னர், குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகள், இசைவிணக்கமாக சாட்சியம் கூறவேண்டும் என்று நியாயப்பிரமாணம் கேட்டுக்கொண்டது (உபாகமம் 17:6). மூன்றாவது, இப்படிப்பட்ட சட்டங்கள், குற்றத்திற்குத் தண்டனையை அனுமதித்தன.*

*மனிதருடைய நன்மைக்காகத் தேவன் அர்த்தப்படுத்தியதில் சிலவற்றை, வேதபாரகரும் பரிசேயரும் எடுத்து அதைத் தீமையானதாக ஆக்கினர். நியாயப்பிரமாணத்தைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் விரோதிகளுக்கு எதிராகத் திருப்பித் தாக்குதலை நியாயப்படுத்துவதற்காக அதை நியாயப்பிரமாணத்தை பிறழ்வு படுத்தினர். இந்தப் பிறழ்வுத்தன்மை, பழிவாங்க நாடும் மனிதரின் இயல்பான விருப்பத்தைத் தூண்டிவிட்டது. தேவன் கொலைத்தண்டனைக்கு உட்படுத்துவார்கள். இயேசு, இந்த நியாயப்பிரமாணத்தின் பிறழ்வுத்தன்மையைக் கையாண்டதுடன், தேவனுடைய தோற்றகால விருப்பநோக்கத்தின் ஆவிக்குரிய அம்சத்தையும் காண்பித்தார். அவர் தமது சீஷர்களுக்கு, பழிவாங்குதலுக்கான இயல்பான விருப்பத்தை எதிர்த்து நிற்கும்படியும் "தீமையை நன்மையினாலே வெல்லும்படியும்" (காண்க ரோமர் 12:21) போதித்தார். பழிவாங்குதல் என்பது தேவனுடைய வேலையாக உள்ளது (ரோமர் 12:19; எபிரெயர் 10:30).*

*கிறிஸ்துவின் காலத்தில், இந்தப்பிரமாணம் நேரடியாக அரிதாகவே நடைமுறைப்பட்டிருந்தது. மக்கள் மற்றவர்களின் பற்களை உடைக்கவோ அல்லது அவர்களின் கண்களைப் பிடுங்கவோ இல்லை. ஒரு கண் அல்லது*

பல்லின் மதிப்பை ஒரு நியாயாதிபதி தீர்மானித்து, பேரம்பேசப்பட்ட தொகை ஒன்று வேலைக்கு உதவிற்று.[38] ஒரு கண் என்பது ஒரு ஆண்டு அல்லது அதற்கு சற்று அதிகமான நாட்களுக்கான கூலிக்குச் சமமாக மதிக்கப்பட்டது, மற்றும் ஒரு பல் என்பது ஒரு சில படிகள் கோதுமைக்குச் சமமானதாக மதிக்கப்பட்டது. சேதங்கள் மதிப்பிடப்பட்டு தொகையாக அளிக்கப்படும் நவீனகால நீதிமன்றங்களில், தனிப்பட்ட காயங்கள் கையாளப்படும் அதே வழிபோன்றதாகவே இது இருந்தது. இருப்பினும் பல விஷயங்களில், மக்கள் இயேசு தடைசெய்த அதே விஷயத்தைச் செய்வதற்காக, சட்ட முறைமையைத் தவறாகப் பயன்படுத்தினர்: உரிய வகையில் தண்டிக்கும் முறைமை என்பது பழிவாங்கும் வகையில் பயன்படுத்தப்பட்டது. காயத்திற்கு நியாயமான இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக மக்கள், பழிவாங்க நாடினர் அல்லது நியாயமானது எதுவோ அதைக் காட்டிலும் அதிகமான இழப்பீட்டைக் கேட்டனர். மக்கள் சமமாகப் பெறுவதிலும் நீதிநிலை சார்ந்த ஊதியம் பெறுதலிலும் முதலாளித்துவத்தை கைக்கொண்டனர்.

**வசனம் 39. "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்"** என்ற இயேசுவின் கட்டளை, "நீதியை நாடாது இருங்கள்" என்பதற்குச் சமமானதாக இருப்பதில்லை. இந்தக் கூற்று, அவரது தோற்றகாலக் குறிப்புரைகளின் சந்தர்ப்பப் பொருளுக்கு எதிராக ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும். "எதிர்த்தல்" என்பதற்கான கிரேக்க வார்த்தை, பொல்லாத நபரால் சீஷர்களுக்குச் செய்யப்பட்ட தீமைக்கு அவர்கள் எதிர்த்து நிற்பதைக் குறிக்கிறது. இயேசுவின் அறிவுறுத்துதல்கள், தனிப்பட்ட புண்படுதல்களைக் கையாள்வது எவ்வாறு என்பதையும், பழிவாங்குதல், உள்பகை மற்றும் மனக்கசப்பு ஆகியவற்றைக் கையாள்வது எவ்வாறு என்பதையும் உரைக்கின்றன. அவர் தாமே பல சந்தர்ப்பங்களில் செய்தபடி (21:12; யோவான் 2:15), அநீதிக்கு எதிராக நாம் பேசக்கூடாது என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை என்பது நிச்சயம். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 4:7); ஆகையால், அவன் தொடங்கிவைத்த தீமையை எதிர்த்து நிற்குதல் என்ற, செயலை நாம் செய்ய வேண்டும் (6:13; ரோமர் 12:9; 1 தெசலோனிக்கேயர் 5:22; 2 தீமோத்தேயு 4:18). ஜான் மெக் ஆர்தர், Jr., அவர்கள், தீமையை எதிர்த்து நிற்குதல் என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுபவருக்கு உரிமைக் கட்டளையாக உள்ளது என்று கருதினார்:

> தீமையை எதிர்க்காது இருத்தல் என்பது நியாயமானதல்ல அது இரக்கமானதும் அல்ல. அது ஒன்றும் அறியாதவர்களைப் பாதுகாக்கத் தவறுகிறது மற்றும் பொல்லாதவர்கள் தங்கள் தீமையில் நிலைத்து இருக்கும்படி ஊக்குவிக்கும் செயல்விளைவைக் கொண்டுள்ளது. இருப்பினும் தீமையைத் தக்கவகையில் எதிர்த்து நிற்குதல் என்பது நியாயமானதாக இருப்பது மட்டுமின்றி, அது பயனுள்ளதாகவும் இருக்கிறது ...
>
> நியாயத்திற்கான தேவனுடைய தரஅளவையைத் தாழ்த்துதல் என்பது, நீதிக்கான தேவனுடைய தர அளவையைத் தாழ்த்துதல் என்பது, நீதிக்கான தேவனுடைய தர அளவையைத் தாழ்த்துதலாக உள்ளது - இந்த நீதியை அப்புறப்படுத்தவோ அல்லது குறைத்துப்போடவோ அல்ல, ஆனால் இதை நிறைவேற்றவும் தெளிவுபடுத்தவுமே இயேசு வந்தார்.[39]

*தனிப்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதலுக்கு எதிராக அடிப்படைக் கொள்கையை இயேசு அமைத்தபின்பு, தவறாக நடத்தப்படுதலை விவரிப்பதற்கு அவர் ஐந்து நிகழ்வுகளை விவரித்தார். இவற்றில் முதலாவது, உடல்ரீதியான தாக்குதலின் செயலை உள்ளடக்கிற்று:* **"ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு."** *கைமுட்டுயினால் ஒருவரின் முகத்தில் வலுவாக அடித்தல் பற்றி இங்கு அவர் குறிப்பிடவில்லை; மாறாக அவர், யாரேனும் ஒருவரின் முகத்தில் கையின் பின்புறத்தினால் மெதுவாக அடித்தல் பற்றி அவர் இங்கு பேசினார். அதை யூதர்கள் மிகப்பெரிய அவமானமாகக் கருதினர் (காண்க யோபு 16:10; புலம்பல் 3:30; மத்தேயு 26:67, 68; மாற்கு 14:65; யோவான் 18:22; 2 கொரிந்தியர் 11:20). முகத்தில் அறைதல் என்பது நிச்சயமாகவே, அற்பமாகக் கருதுதலாகவும் கனவீனப்படுத்துதலாகவும் உள்ளது. யாரேனும் ஒருவரின் உள்ளங்கை அல்லது கைமுட்டியால் தாக்கப்பட்டவரைக் காட்டிலும், புறங்கையால் முகத்தில் அடிக்கப்பட்டவருக்கு இருமடங்கு இழப்பீடு தரப்பட வேண்டும் என்று யூதருடைய நியாயப்பிரமாணம் கட்டளை வகுத்தது.*[40]

*முகத்தில் அடிக்கப்படுதல் என்ற வகையில்அவமானப்படுத்தப் பட்டமையை எதிர்த்துத் தாக்குதலுக்குப் பதிலாக, இன்னொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டும்படி இயேசு கூறினார். அடிக்கப்பட்டால் திருப்பி அடித்தல் என்பது இயல்பான பதில்செயலாக இருக்கும் என்றாலும், இதற்கு எதிராகச் செய்யும்படி இயேசு அறிவுறுத்தினார். இந்த பதில்செயல், அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ஏற்கனவே பரிந்துரைத்திருந்த சாந்தமும் தாழ்மையும் உள்ள ஆவியைக் காத்துக்கொள்வதாக உள்ளது. இன்னொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டுதல் என்பது, ஒன்றுமறியாத, பெருந்தன்மையான எண்ணப்போக்கைச் செயல்விளக்கப்படுத்துகிறது. தாக்கப்படும்போது அல்லது அவமானப்படுத்தப் படும்போது, பதிலுக்குத் தாக்காது இருந்தலினால், குணத்தின் கண்ணியமும் பலமும் செயல்விளக்கப்படுத்தப்படுகின்றன. தவறாக நடத்தபடுதலுக்கு தயவான இயல்புடன் நாம் பதில்செய்யும்போது, குற்றம் இழைத்தவரின் தலையில் நாம் "அக்கினித்தழலை" குவிக்கிறோம் என்று பவுல் கூறினார் (ரோமர் 12:20). அதாவது, தவறாக நடத்தப்படுதலுக்கு நாம் இவ்வாறு பதில் செய்யும்போது, குற்றம் இழைத்தவர் வெட்கத்தினால் பற்றியெரிய வேண்டும் - மற்றும் அவர் தமது பொல்லாத செயல்களில் இருந்து மனந்திரும்பவும்கூடும்.*

***வசனம் 40.*** *இயேசுவின் இரண்டாவது விவரிப்பு, பிரதிவாதியின் உடையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வாதியின் முயற்சியாக, அவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தலைச் சித்தரிக்கிறது:* **"உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு."** *பிரதிவாதியிடம் போதுமான நிதிநிலை ஆதாரங்கள் இல்லாதிருந்தால், அவர் பட்ட கடன், அவரது உடைகளின் மூலமாகப் பாதுகாக்கப்படவோ அல்லது அடைக்கப்படவோ முடிந்திருந்தது. இயேசு இங்கு உயர்வு நவிற்சி அணியைப் பயன்படுத்தினார் என்பது உறுதி, ஏனெனில் "வஸ்திரம்" மற்றும் "அங்கி" ஆகிய இரண்டையும் விட்டுவிடும் மனிதர் ஏறக்குறைய நிர்வாணமாக இருப்பார் (இது அவர் ஒரு ஜோடி உடை மாத்திரம் கொண்டிருப்பார் என்று யூகிக்கிறது).*

*"வஸ்திரம்" அல்லது "தளருடை" என்பது, "ஒரு நபர் தமது தோலுக்கு*

மேலாக அணியும் இரவு உடை போன்ற, நீண்ட கையுடைய உள் உடையாக இருந்தது.” இது அடிக்கடி, ஆண்களால் குறுகியதாக மற்றும் பெண்களால் கணுக்கால் வரையிலும் அணியப்பட்டது.[41] “அங்கி” அல்லது “மேலாடை” என்பதே மதிப்பு மிக்க முக்கியமான உடையாக இருந்தது. இது தளருடைக்கு மேலே அணியப்பட்ட மேலாடையாக இருந்தது. ஒரு சீஷர், தமது தளருடைக்காக வழக்குத் தொடுக்கப்படும்போது, அவர் தமது மேலாடையையும் மனப்பூர்வமாக விட்டுக்கொடுக்க வேண்டும் என்று இயேசு கூறினார். இந்த உடை விபரங்கள் லூக்கா சுவிசேஷத்தில் மாற்றித் தரப்பட்டுள்ளன, அது தனது சந்தர்ப்பப் பொருளில், வழக்குத் தொடுக்கப்படுதல் என்பதற்கு மாறாக, திருட்டு என்ற நிகழ்வைக் கருத்தாகத் தருகிறது (லூக்கா 6:29).

ஒரு மேலாடையானது, தட்பவெப்ப நிலையில் இருந்து காக்க மூடுதலுடன் கூடுதலாக, குளிர் மிகுந்த பனிக்கால இரவுகளில் ஒரு போர்வையாகவும் கோடை காலத்தில் ஒரு தலையணையாகவும் பயன்படுத்தப் பட்டது. ஒரு கடனுக்குப் பிணையமாக ஒரு நபர் தமது மேலாடையை ஒப்புவித்து இருந்தாலும், அது இரவு வேளையில் அவருக்குத் திருப்பித்தரப்பட வேண்டும் (யாத்திராகமம் 22:26, 27; உபாகமம் 24:12, 13; யோபு 22:5, 6). ஒருவர் தமது மேலாடையை நிரந்தரமாக விட்டுக்கொடுத்திட வேண்டும் என்று நீதிமன்றம் கேட்டுக்கொள்ளாது இருக்கையில், அதை அவர் மனப்பூர்வமாக அளிக்க முடியும். கசப்பும் மனவெறுப்பும், இரு தரப்பினருக்கும் சுவையற்ற அனுபவமும் தரும் வகையில் ஒரு வழக்கில் இழுத்துச் செல்லுதலைக் காட்டிலும், ஒருவர் தமது மேலாடையை விட்டுக் கொடுத்து விடுதல் மேலானதாக இருக்கும் என்று இயேசு கூறினார். அப்போஸ்தலரான பவுல், அவிசுவாசிகளுக்கு முன்பாக நீதிமன்றத்திற்கு ஒரு பிரச்சனையை எடுத்துச் செல்வதைக் காட்டிலும், ஒரு கிறிஸ்தவன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுதல் மேன்மையானதாக இருக்கும் என்று பிற்பாடு கூறினார் (1 கொரிந்தியர் 6:1-8).

**வசனம் 41.** இயேசு பயன்படுத்திய மூன்றாவது விவரிப்பு, ரோம அலுவலர்கள் தங்கள் சுமைகளைச் சுமந்து வரும்படி யூதர்களுக்குக் கட்டளையிட்ட நடைமுறையைப் பற்றியதாக இருந்தது: **“ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ.”** “பலவந்தம்பண்ணினால்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வினைச்சொல்லானது, “கட்டாயப்படுத்துதல்” அல்லது “சேவைசெய்யும்படி வற்புறுத்துதல்” என்று அர்த்தப்படுகிற, பெர்சியச் சொல்லின் இருந்து கடனாகப் பெறப்பட்ட வார்த்தையாக உள்ளது. பெர்சியாவின் அரசகுடும்ப அஞ்சல் சேவை இந்த வார்த்தைக்குப் பின்னணியாகப் பயன்பட்டது என்பது உறுதி. கோரேஸ் அரசர் தமது பேரரசு முழுவதிலும் செய்திகளை விநியோகிக்க, தொடர் ஓட்ட முறைமை ஒன்றைப் பயன்படுத்தினார். ஒருநாள் பயணதூரத்தில் அடுத்த நிலையம் அமையும் வகையில், முதன்மைப் பெருஞ்சாலைகளில் அஞ்சல் நிலையங்களை அவர் நிறுவினார். குதிரையில் பயணம் செய்யும் ஆட்கள், ஒரு நிலையத்தில் இருந்து இன்னொரு நிலையத்திற்குச் செய்திகளை எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்பட்டனர். முதலாமவர் இரண்டாவது நிலையத்தில் செய்தியை ஒப்புவிப்பார், இரண்டாமவர் மூன்றாவது நிலையத்தில் அதை ஒப்புவிப்பார், மற்றும் இதுபோன்று தொடர்ந்து அடுத்தடுத்த நபர்கள் அடுத்தடுத்த நிலையத்தில் செய்தியை ஒப்புவிப்பார்கள். செய்தியை எடுத்துச்

செல்லும் செய்தித்தூதர் *angaros* என்று அழைக்கப்பட்டார், மற்றும் அஞ்சலை எடுத்துக்கொண்டு பயணம் செல்லும் முறைமை *angarēion* என்று அழைக்கப்பட்டது.[42] *Angareuō* என்ற சொற்றொடர், "ஒரு செய்தியாளரை விரைந்து அனுப்புதல்" மற்றும் "ஒருவரை சேவை செய்யும்படி வற்புறுத்துதல்" என்று அர்த்தப்பட்டது. செய்தியாளர்கள் தங்கள் ஊழியத்தைச் செயல்படுத்த, அரசரின் குடிமக்களுடைய குதிரைகள் மற்றும் பிற அவசியமான பொருட்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும்படிக்கு, அவர்களை வற்புறுத்த அதிக அதிகாரம் கொண்டிருந்தனர்.

இந்த நடைமுறையைப் பிற்பாடு ரோமர்கள், தங்களுக்காகத் தங்கள் குடிமக்கள் சுமைகளைச் சுமந்துவரக் கட்டாயப்படுத்துதலுக்கு விரிவாக்கினர். கிரேக்கத் தத்துவ ஞானியான எபிக்டெட்டெஸ் என்பவர், குடிமக்களுக்குப் பின்வருமாறு அறிவுரை கூறினார்:

> உங்கள் முழு உடலையும் நீங்கள், அது அனுமதிக்கும் அளவுக்கு, சுமையேற்றப்பட்ட ஒரு அப்பாவியான கழுதையைப் போன்று நடத்த வேண்டியவர்களாக இருக்கிறீர்கள்; அது கட்டளையிடப்பட்டு மற்றும் அதை ஒரு போர்வீரன் பிடித்தால், அது அப்படியே போகட்டும், எதிர்த்து நிற்காதீர்கள் அல்லது முறையிடாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தால், உங்களுக்கு அடி விழும் மற்றும் உங்கள் சிறு கழுதையையும் நீங்கள் அவ்வாறே இழந்துபோவீர்கள்.[43]

இந்த முறைமைதான், கிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்து வரும்படி, சிரேனே ஊரானாகிய சீமோனைப் போர்வீரர்கள் வற்புறுத்த அனுமதித்தது (27:32). ஒரு போர்வீரன் ஒரு குடிமகனை, தனது போர்வீரன் சுமைகளை ஒருரோமன் மைல் தூரம் மாத்திரமே தூக்கிவரும்படி கேட்டுக் கொள்ள முடியும். வில்க்கின்ஸ் அவர்களின் கூற்றுப்படி, "*மைலியான்* என்ற கிரேக்கச் சொற்றொடர், 'ஆயிரம் தப்புகள்' என்று அர்த்தப்படுகிறது. இது ஏறக்குறைய 4,854 அடிகளாக (நவீன அமெரிக்க அளவு தூரத்தில், 'ஒரு மைல்' என்பதாக) உள்ளது."[44]

இயேசு தமது சீஷர்களுக்கு, ரோம அலுவலர்களின் சுமையைக் கடப்பாடுடைய ஒரு மைல் தூரம் தூக்கிச் செல்ல வற்புறுத்தப்படுதலை எதிர்த்து நிற்குமாறு போதிப்பதற்குப் பதில், இரண்டாவது மைல் தூரமும் செல்ல மனவிருப்பமாக இருக்கும்படி ஊக்குவித்தார். அவ்வாறு செய்வதினால், ஒரு கிறிஸ்தவர் அந்தப் போர்வீரர் மீது தேவபக்தியுள்ள செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும். அவரைப் பின்பற்றுபவர்கள் - அன்பினாலும் மரியாதையினாலும் - கடமையின் அழைப்பிற்கு மேலாகவும் அப்பாலும் செல்ல வேண்டியிருந்தது. பிற்பாடு அவர், "அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு: நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்" என்று கூறினார் (லூக்கா 17:10).

**வசனம் 42.** நான்காவது விவரிப்பு, திரும்பிச் செலுத்தும் விருப்பம் இன்றிப் பணம் கடனாகக் கேட்கும் ஒருவரைப் பற்றிச் சித்தரித்தது: **"உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு."** கடைசியான இந்த இரு விவரிப்புகளில், தவறாக நடத்தப்படுதலோ அல்லது பலவந்தமான நடக்கைக்குப் பதில்

அளித்தலோகூட அல்ல, ஆனால் ஏழையினால் விடுக்கப்படும் நேர்முகமான வேண்டுகோள்களுக்குப் பதில் அளித்தல் என்பதே உள்ளது.[45] இஸ்ரவேல் மக்கள் தங்கள் மத்தியில் இருக்கும் ஏழைகளை, திறந்த கைகளுடன் கூடிய பெருந்தன்மையுடன் நடத்தும்படி நியாயப்பிரமாணம் கேட்டுக்கொண்டது (உபாகமம் 15:7-11). இதற்கு இணைவசனமான லூக்கா 6:30ன் மீது, லியோன் மோரீஸ் அவர்கள், பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> இந்தக்கூற்றின் ஆவித்துவமே மீண்டும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இதைக் கிறிஸ்தவர்கள் முற்றிலும் நேரடியானதாக எடுத்துக்கொண்டார்கள் என்றால், பரிசுத்தமான பாமரர்கள், எதுவுமே இல்லாதவர்கள் மற்றும் வளவாழ்வு பெற்ற சோம்பேறிகள் மற்றும் திருடர்கள் என்ற ஒரு மக்கள் பிரிவுவிரைவிலேயே ஏற்பட்டுவிடும். இயேசு நாடியது இதுவல்ல, ஆனால் தம்மைப் பின்பற்றுபவர்கள், கொடுப்பதற்கு, கொடுப்பதற்கு, மற்றும் கொடுப்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று அவர் நாடினார்.[46]

இயேசுவின் கட்டளை, நமது சொந்த வசதிகளுக்கு முன்னால் மற்றவர்களின் தேவைகள் வரவேண்டும் என்று தெளிவாக உணர்த்துகிறது.[47]

ஐந்தாவது விவரிப்பு, இதற்கு முந்திய விவரிப்புடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது, ஆனால் இது இன்னொருவரிடத்தில் கடன் கேட்கும் ஒரு நபர் பற்றிய விஷயத்தை உள்ளடக்குகிறது: **"உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே."** யூதர் ஒருவர் தனது சக யூதரிடத்தில் வட்டிவாங்காமல் கடன் கொடுக்க வேண்டும் என்று கட்டளை விதி நியாயப்பிரமாணத்தில் உள்ளது (யாத்திராகமம் 22:25; லேவியராகமம் 25:35-37; உபாகமம் 23:19, 20). இந்த விஷயத்திலும்கூட, ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு, அந்தக் கடன் மனப்பூர்வமாக மன்னிக்கப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கேட்டுக் கொண்டது. இது கடன் வாங்குபவருக்கு அற்புதமான வாய்ப்பை உருவாக்கிற்று, ஆனால் கடன் கொடுப்பவருக்கு இது நல்லதொரு சூழ்நிலையாக இருக்கவில்லை.

வியாபார நோக்கத்திற்காகப் பணம் கடன் கொடுத்தலைப் பற்றி இயேசு இங்கு கலந்துரையாடவில்லை. அப்படிப்பட்ட கடன்கள் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்ததில்லை. அதற்குப் பதிலாக, தனிப்பட்ட நிதிநிலை உதவிக்காகச் சட்டப்பூர்வமான தேவையுடன் ஒருவர் கடன் வாங்குதல் பற்றி அவர் பேசினார். அப்படிப்பட்ட சூழ்நிலை எழுமானால், சக யூதர்கள் இழப்பீடு எதுவும் பெறும் நினைப்பின்றியே உதவும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதேபோன்ற பெருந்தன்மைக்கு, லூக்கா 6:34லும் இயேசு அழைப்பு விடுத்தார்: "திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன்கொடுக்கிறார்களே." பதில் ஊதியத்தை எதிர்பார்க்காது காண்பிக்கப்படும் பெருந்தன்மையானது, கிறிஸ்துவின் ஆவியைச் செயல்விளக்கப் படுத்துகிறது மற்றும் அது தேவனுடைய வெளிச்சத்தை இந்த உலகத்தார் காண அனுமதிக்கிறது.

## விரோதிகளைப் பற்றி (5:43-48)

***[43]" 'உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக'***
***என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். [44]நான் உங்களுக்குச்***
***சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச்***
***சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு***
***நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத்***
***துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். [45]இப்படிச்***
***செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப்***
***புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது***
***சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும்***
***மழையைப் பெய்யப்பண்ணுகிறார். [46]உங்களைச் சிநேகிக்கிறவர்களையே***
***நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும்***
***அப்படியே செய்கிறார்கள் அல்லவா? [47]உங்கள் சகோதரரைமாத்திரம்***
***வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும்***
***அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? [48]ஆகையால், பரலோகத்திலிருக்கிற***
***உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண***
***சற்குணராயிருக்கக்கடவீர்கள்."***

***வசனம் 43.*** *யூதர்கள் தங்களுக்கிடையிலும் புறஜாதியார்களுடனும் கொண்டிருக்க வேண்டிய உறவுமுறைகள் குறித்துப் பிரபலமாக நம்பப்பட்டவற்றை இயேசு மறுகண்ணோட்டம் இட்டார். ஒருபுறத்தில் மக்கள்,* ***"உனக்கடுத்தவனைச் சிநேகிக்க வேண்டும்"*** *என்று கற்பிக்கப்பட்டிருந்தனர். சுருக்கமாக்கப்பட்ட இந்த மேற்கோள், லேவியராகமம் 19:18ல் இருந்து வருகிறது: "பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்." இதை இயேசு, இரண்டாவது பிரதான கட்டளையாக அடையாளப்படுத்தினார் - இது "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து," என்பதற்கு அடுத்ததாக உள்ளது (லூக்கா 10:27; காண்க மத்தேயு 22:34-39; உபாகமம் 6:5). துரதிர்ஷ்டவசமாக யூதர்கள், தாங்கள் அன்புகூர வேண்டிய "அயலார்" என்பதை மிகக் குறுகிய வகையில் விளக்கம் தரச்சாய்ந்தனர் - இது அவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்த, நண்பர்களின் மற்றும் குடும்பத்தின் மற்றும் பழக்கப்பட்டவர்களின் உள்வட்டத்திற்குள் இருந்தவர்களை மாத்திரமே குறித்ததாக நினைத்தனர் (லூக்கா 10:29-37).*

*இதற்கு மறுபுறத்தில் மக்கள், "[நீ]* ***உன் சத்துருவைப் பகைப்பாயாக"*** *என்று தவறாக கற்பிக்கப்பட்டிருந்தனர். அன்புகூருவதற்கான முந்திய கட்டளையைப் போல், இஸ்ரவேல் மக்கள் தங்கள் விரோதிகளைப் பகைக்க வேண்டும் என்று குறிப்பாக அறிவுறுத்தும் பழைய ஏற்பாட்டு மேற்கோள் எதுவும் இருப்பதில்லை.[48]*

*யூதர்கள் தங்கள் விரோதிகளைப் பகைத்தல் என்ற கருத்து, கும்ரான் பிரிவில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. சவக்கடல் தோல்சுருள்களில் சமூக சட்டம்,*

“வெளிச்சத்தின் பிள்ளைகள் எல்லாரையும் அன்புகூருங்கள், தேவனுடைய வடிவமைப்பில் அவரது பங்கின்படி இதைச் செய்யுங்கள், மற்றும் இருளின் பிள்ளைகள் எல்லாரையும் வெறுத்துவிடுங்கள், தேவனுடைய பழிவாங்குதலில் அவரவரின் குற்றத்தின்படி இதைச் செய்யுங்கள்” என்று உறுப்பினர்களுக்கு அறிவுறுத்துகிறது.[49] யூதர்கள் பொதுவாக “மனிதரை வெறுப்பவர்கள் என்று முத்திரையிடப் பட்டிருந்தனர் என்று குறிப்பிட்ட யோசிப்பஸ் அவர்கள், (தாமே ஒரு யூதராக இருந்தவகையில்) இந்தக் குற்றச்சாட்டை மறுத்தார்.[50]

***வசனம் 44.*** “உன் அயலான்மீது அன்புகூருவாயாக” என்ற கட்டளையுடன் இயேசு, ***“உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்”*** என்பதைக் கூடுதலாக்கினார். “அன்பு” என்பதற்கான கிரேக்க வினைச்சொல் இங்கு அன்புகூருதலின் மிக உயர்ந்த வடிவமான *agapē* என்ற பெயர்ச்சொல்லுடன் தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. இந்தச் சொற்றொடர் உணர்வுப்பூர்வமான உணர்வுகளைக் குறிப்பதில்லை, ஆனால் இன்னொருவரின் மிக உயர்ந்த நன்மையை நாடுகிறது. இயேசுவின் சீஷர்கள், தங்கள் நண்பர்களோ அல்லது விரோதிகளோ, யாராக இருந்தாலும், மற்ற மக்களின் நலத்திற்கு மிகச்சிறந்தவற்றைச் செய்ய வேண்டும் என்று இயேசு கூறினார். இதற்கு இணைவசனமாக லூக்கா சுவிசேஷத்தில் இயேசு, “உங்கள் சத்துருக்களைச் **சிநேகியுங்கள்**; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு **நன்மைசெய்யுங்கள்**” என்று கூறினார் (லூக்கா 6:27; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது).

மேலும் இயேசு ***“உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்”*** என்று கூறினார் (காண்க 5:10-12). நமது விரோதிகள் மீது இதமான உணர்வுகளைக் கொண்டிருத்தல் கடினமாக இருக்கலாம் என்றிருக்கையில், நம்மை அவர்கள் எவ்வாறு நடத்த நாம் விரும்புகிறோமோ. அவ்வாறே நாம் அவர்களை நடத்த முடியும் (7:12). டக்ளஸ் R. A. ஹேர் அவர்கள் பின்வருமாறு உற்றுக்கவனித்தார்.

> நம்மிடத்தில் கீழ்ப்படியாமை இருந்தபோதிலும், நம்மீது அன்புகூரக்கூடியவராக உள்ள தேவனை நினைக்காமல், நம்மால் நமது விரோதிகளுக்காக ஊக்கமாக ஜெபிக்கவோ அல்லது நம்மை வெறுத்து நம்மைத் தவறாக நடத்துபவர்களை அன்புகூரவோ நம்மால் இயலாது. தேவனுடைய அன்பின் வெளிச்சத்தில் நமது விரோதிகளைக் கண்ணோக்குதல் என்பது, அவர்களை நேர்மறையான செயல்களால் திகைக்க வைப்பதை நோக்கிய முதல் அடிவைப்பாக உள்ளது.[51]

இயேசு தாமே, தம்மைத் துன்புறுத்தியவர்களுக்காக ஜெபித்தார். சிலுவையில் அவர், “பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று கதறினார் (லூக்கா 23:34).

***வசனம் 45.*** ஒருவர் தமது விரோதிகள் மீது அன்புகூருதல் என்பது, பாவிகள் மீது தேவனுடைய எண்ணப்போக்கைப் பிரதிபலிக்கிறது என்று இயேசு மறைமுகமாக உணர்த்தினார்: தேவன் விசுவாசிகள் மீதும் தேவதூஷணம் செய்பவர்கள்மீதும் ஒன்றுபோலவே **சூரியனை** உதிக்கச் செய்து **மழையைப்** பெய்யச்செய்கிறார் (காண்க சங்கீதம் 19:1-6; 145:9; நடபடிகள் 14:16, 17). நாம் நமது விரோதிகளை நமது நண்பர்கள் போலப் பாவித்துப் பதில் செயல் செய்யும்

வேளையைக் காட்டிலும் வேறு எந்த வேளையிலும் அதிகமாக நாம் நமது பிதாவைப் போலிருப்பதில்லை. உங்கள் **பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்** என்ற சொற்றொடர், பிள்ளைகள் தங்கள் தந்தையைப் போலச் செய்தலின் பணியைச் சுட்டிக்காண்பிக்கிறது (காண்க எபேசியர் 5:1).

**வசனம் 46.** இயேசு, **"உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?"** என்று கேட்டார். தம்மை அன்புகூரும் ஒருவர் மீது அன்புகூரும் நபர் பற்றி அசாதாரணமான எதையும் எவரொருவரும் காண்பதில்லை. மற்றவர்கள் மீது அன்புகூர, இந்த மிகக்குறைவான அணுகுமுறையை மேற்கொள்பவர்கள், பலன் எதையும் பெறமாட்டார்கள், ஏனெனில் **ஆயக்காரரும்** அப்படியே செய்தனர்.

ஆயக்காரர்கள் யூதர்களிடமிருந்து ரோமானியருக்கு வரிவசூல் செய்து கொடுத்ததால் மற்றும் அடிக்கடி அவர்கள் அதிகமாக வசூலித்ததால், அவர்கள் பழித்துரைக்கப் பட்டனர். இந்த முறைமை தனக்குள் ஒரு சூழற்சி வடிவம் கொண்டிருந்தது: ரோமானியர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரிவசூல் செய்யும் உரிமையை ஏலம் விட்டனர். அதில் வெற்றிபெறும் ஏலக்கேட்பாளர், உண்மையில் வரிவசூல் செய்யத் தமக்குக் கீழே பணியாட்களை நியமிப்பார். அந்தப்பணியாட்களுக்குச் சம்பளம் தருவதற்காக, குறிப்பிட்ட தொகைக்கு மேல் வசூல் செய்தல் என்பது சட்டபூர்வமாக இருந்தது. இருந்தபோதிலும், நியாயமானதைக் காட்டிலும் அதிகமான பணத்தை இந்தப் பணியாளர்கள் வசூல் செய்வது தனிப்பட்ட வகையாக இருந்தது. "ஆயக்காரர்கள் எவ்வளவு அதிகமாய் வரிவசூலித்தார்களோ, அவ்வளவு அதிகமாய் வெறுக்கப்பட்டனர், மற்றும் அவர்கள் எவ்வளவு அதிகமாய் வெறுக்கப்பட்டனரோ, அவ்வளவு அதிகமாய் வரிவசூலித்தனர்."[52] ஆயக்காரர்களை மத்தேயு, புறஜாதியார் (5:46, 47; 18:17), பாவிகள் (9:10, 11; 11:19) மற்றும் விபசாரிகள் (21:31, 32) ஆகியோருடன் வகைப்படுத்தினார். மிஷ்னாவில் அவர்கள் கள்வர்கள் மற்றும் கொலைகாரர்கள் ஆகியோருடன் இணைவுபடுத்தப்பட்டுள்ளனர்.[53]

**வசனம் 47.** இயேசு தமது முந்திய கேள்விக்கு இணையாக, **"உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன?"** என்று கேட்டார். ராபர்ட் H. குன்ரீ அவர்கள், "வாழ்த்துதல்கள், வெறுமனே ஒரு 'ஹலோ' சொல்லுதலைவிட அதிகமானதாக இருந்தன. அவைகள் மற்ற நபரின் நலத்திற்கான விருப்பத்தை வெளிப்படுத்துதலை அடக்கியிருந்தன" என்று குறிப்பிட்டார்.[54] ஒருவர் தமது விரோதியை வெறுத்தால், அவருக்கு வாழ்த்துதல் அளிக்கவே மாட்டார்.

இவ்வாறு - தங்கள் குறிப்பிட்ட குடும்பம் அல்லது குழுவில் உள்ளவர்களை மட்டும் வாழ்த்துதல் என்ற வகையில் - நடந்துகொண்ட மக்கள், **புறஜாதியாரைவிட** மேன்மையானவர்களாக இருக்கவில்லை. இது யூதர்கள் கேள்விப்படுவதற்குக் கடினமான செய்தியாக இருந்திருக்க வேண்டும். இயேசுவின் சீஷர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமான அன்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்களில், புறஜாதியாரும் முழுமையான எதிரிகளும்கூட ஈர்ப்பைக் கண்டறியும் வகையில் ஒரு வேறுபாடு காணப்பட வேண்டியிருந்தது.

**வசனம் 48.** அன்பின் மீதான இயேசுவின் கலந்துரையாடலுக்குப் பின்னர், அவரது உதடுகளில் இருந்து ஒரு பெரிய "ஆகையால்" விழுந்தது. **"ஆகையால்,**

***பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.”*** *“சற்குணர்” என்பதற்கான (teleios என்ற) கிரேக்க வார்த்தை “முழுமையானவர்”* [“complete”] *[இங்கு தமிழ் வேதாகமத்தில் “பூரணசற்குணர்” என்றே உள்ளது] (19:21) அல்லது “தேறினவர்” (1 கொரிந்தியர் 2:6; 14:20; எபேசியர் 4:13) என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இங்கு இவ்வார்த்தை, தேவனைப் பற்றிய விவரிப்பு என்ற வகையில் பயன்படுத்தப்பட்டது என்பதால், இது பூரணத்துவத்தைக் குறித்தது. எல்லா சீஷர்களும் தங்களை அளந்துகொள்வதற்குத் தேவனே தர அளவையாக இருக்கிறார். உடனடி சந்தர்ப்பப் பொருளில், பூரணத்துவம் என்பது, இந்த உலகத்து மக்கள் யாவரையும் தேவன் நேசிப்பது போன்றே, ஒருவர் தமது விரோதிகளை நேசிக்க வேண்டும் என்பதுடன் தொடர்புபடுத்துகிறது (காண்க 1 யோவான் 4:7-21).*

*இயேசுவின் கட்டளை, அதன் சாத்தியமற்றதாகக் காணப்படும் பண்பினால் அவரது சீஷர்களைத் தோல்வியடையச் செய்வதை விருப்ப நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அதற்கு மாறாக அது, அவர்கள் தேவனைப் போல் இருக்கும்படி ஏவுவதாக இருந்தது. ஒருகருத்தில் இந்த வாழ்வில் கிறிஸ்தவர்கள் “பூரணமானவர்கள்” (“பக்குவமானவர்கள்”; NIV) ஆக முடியும் என்ற கருத்து காணப்படுவதுடன், இன்னொரு கருத்தில், இனிவரவிருக்கும் வாழ்வு கிடைக்கும் வரையிலும் அவர்கள் ஒருக்காலும் “பூரணப்பட்டவர்களாக” இருக்க மாட்டார்கள். ஆகையால் பவுல், “இலக்கை நோக்கித் தொடருகிறேன்” என்று கூறினார் (பிலிப்பியர் 3:12-16). ஒருவர் தமது குறைவுகளைப் பற்றி அறிதலானது, அவர் தேவனுடைய கிருபையை இன்னும் அதிகமாய்ச் சார்ந்திருக்கும்படி அவரைத் தூண்ட வேண்டும். கிருபையானது பதிலுக்கு, பாவத்தை மேற்கொள்ளத் தூண்டுதலாகச் செயல்படும் (தீத்து 2:10-14).*

*‘‘பூரணராயிருத்தலுக்கான’’ கட்டளையானது குறிப்பிடத்தக்க இணைவசனங்களைக் கொண்டுள்ளது. இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன், “உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய்” என்று கூறினார் (உபாகமம் 18:13). மேலும் அவர், “உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்” என்று கூறினார் (லேவியராகமம் 19:2), இது கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு கொடுத்த புத்திமதியாக உள்ளது (1 பேதுரு 1:15, 16). சமனான இடத்தில் செய்த பிரசங்கத்தில் இயேசு, “உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்” என்று கூறினார் (லூக்கா 6:36).*

### ✧✧✧✧✧ பாடங்கள் ✧✧✧✧✧

## *ஒரு எச்சரிக்கை (5:21-26)*

*நாம் எச்சரிக்கையாக இராவிட்டால், யூதத்துவ மார்க்க கல்வியாளர்கள் நடைமுறைப்படுத்திய, தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் அதே பிறழ்வைச் செய்த குற்றம் உள்ளவர்களாகிவிடக்கூடும். கிறிஸ்துவின் பிரமாணத்தைப் புரிந்துகொண்டு, ஆனால் அதற்குப் பின்பு அந்தப் பிரமாணம் ஒருக்காலும் நோக்கங்கொண்டிராத வகையில் அதை விளக்கப்படுத்தவும் விளக்கியுரைக்கவும் சாத்தியம் உள்ளது. பிரமாணத்தின் எழுத்தை மாத்திரம் காத்துக்கொண்டு - ஆனால்*

அதன் ஆவியை, பொருளடக்கத்தை அல்லது அர்த்தத்தை காப்பதில் நோக்கமற்றவர்களாக - இருக்கும் நிலையில் நாம் திருப்தி அடையும் வரையிலும், அதிலிருந்து நாம் வெகுதூரத்தில் இருக்கும்போதே, நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கிறோம் என்று நம்மை நாமே இணங்கச் செய்பவர்களாக இருக்கலாம்.

## கோபமும் பாவமும் (5:21, 22)

கோபத்தின் எல்லா வகைகளையும் இயேசு கண்டனம்பண்ணவில்லை, ஆனால் தனிப்பட்ட உறவுமுறைகளில் வளரும் கோபத்தையே அவர் கண்டனம் பண்ணினார். பாவம் மற்றும் அநீதி ஆகியவற்றிற்கு மேலான இடம் ஒன்று கோபத்திற்கு உள்ளது. நமது கோபத்தில் அதிகமானவை இந்த விஷயங்களின்மீது காண்பிக்கப்படுவதில்லை என்பதே பிரச்சனையாக உள்ளது. மாறாக நாம், நமக்குச் செய்யப்படும் அவமானங்கள் அல்லது அநீதிகள் மீதே பற்றி எரிகிறோம். நாம் தனிப்பட்ட வகையில் தாக்கப்படும்போது சுலபமாகக் கோபம் கொள்கிறோம், ஆனால் மற்ற அநீதிகள் ஏராளமாய்ப் பெருகும்போது, நாம் கோபம் கொள்ளத் தாமதிக்கிறோம். இயேசுகூட கோபம்கொண்டார் (21:12, 13; 23:17; மாற்கு 3:5), ஆனால் அவரது கோபம் எதுவும் அவரது சுய முனைப்பினால் மூடப்பட்டதாக இருக்கவில்லை. பேதுரு, "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், ..." என்று எழுதினார் (1 பேதுரு 2:23).

சிலவேளைகளில் நமது தனிப்பட்ட மேட்டிமையானது, சட்டப்பூர்வமான அக்கறைகளிலும் பிரச்சனைகளிலுமான நமது தற்பாதுகாப்பில் பிடித்து வைக்கப்படுகிறது. பின்பு நமது சொந்தக் கண்ணோக்கில், எதிராளிகள் நம்மையும் நமது நிலைப்பாடுகளையும் தாக்குகின்றனர். இது நாம் கோபத்தில் பதில்செயல் செய்யக் காரணமாகிறது. உண்மைநிலையில் நாம் நம்மைத் தற்காத்துக் கொண்டிருக்கும்போது, நாம் சத்தியத்தைத் தற்காப்பதாக நினைத்து, நம்மையே நாம் வஞ்சித்துக் கொள்கிறோம். நாம் சுவிசேஷத்தைத் தற்காத்துக்கொள்ள விரும்பும்போது, "சுயம்" நமது வழியில் குறுக்கிடாது இருப்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## தேவனுடைய தர அளவை (5:23-26)

நமக்கும் மனிதர்களால் நிலைநாட்டப்பட்ட மனரீதியான தர அளவைகளுக்கும் இடையில் ஒப்பீடுகளை ஏற்படுத்துதல் போதாது. நாம் தேவனுடைய தர அளவையை இலக்காகக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் (யோவான் 7:24; 2 கொரிந்தியர் 10:12, 13). நாம் நமது சகோதரர் ஒருவருடன் நமது உறவில், நாம் புண்படுத்தி இருக்கலாம் அல்லது நம்மை அவர் புண்படுத்தி இருக்கலாம் என்று மட்டும் நினைக்க முடியாது, ஆனால் இப்படிப்பட்ட முரண்பாடுகள் தேவனுடனான நமது உறவை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் (1 யோவான் 3:14-18). தேவனுடைய பரிசுத்த வார்த்தையைப் பற்றிய நமது எண்ணப்போக்குகளே, உண்மையில் இந்த அறிவுறுத்துதலின் வேர்பகுதியில் உள்ளது. அவரது வசனம் பற்றிய நமது எண்ணப்போக்குகளே நமது செயல்களைத் தீர்மானிக்கிறன (1 யோவான் 5:2, 3). நமது இருதயங்கள் நேரானவையாக இராதிருந்தால்,

அந்தப் பிரச்சனைகளை நாம் உடனடியாகத் தீர்க்க வேண்டும் (2 கொரிந்தியர் 6:2). ஏனெனில் ஆராதனை உண்மையிலேயே "ஆவியோடும் உண்மையோடும்" இருப்பதற்கு (யோவான் 4:23), நாம் சடங்காச்சாரமாக சரியாக இருப்பது மட்டுமின்றி உள்ளாகவும் சரியாக இருக்க வேண்டும்.

## ஒப்புரவாகுல் (5:23-26)

புண்படுத்தப்பட்ட அல்லது புண்படுத்தும் சகோதரர் ஒருவருடன் செய்ய வேண்டிய செயல்முறைகள் பற்றி தக்கவகையிலான நடைமுறைகளை வேதாகமம் தருகிறது. இவ்வசனப் பகுதியில் இயேசு, "உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று" உள்ள விஷயத்தில், நீங்கள் அவரிடம் சென்று சமாதானம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசரத்தை வலியுறுத்தினார் (5:23, 24). இன்னொரு வேளையில் அவர், "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து ..." (18:15). கலாத்தியருக்குப் பவுல், "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" என்று கூறினார் (கலாத்தியர் 6:1). இந்தக் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டால், சபைக்குழுமங்களில் எழும் பிரச்சனைகள் பலவற்றை இது தீர்த்து வைத்துவிடும்.

முதல் நடைமுறைப்படுத்துதலில் (5:23, 24), நமக்கும் கிறிஸ்தவர்களுக்குள் இருக்கும் இன்னொரு சகோதரர் அல்லது சகோதரிக்கும் இடையில் பிரச்சனை உள்ளது என்று நாம் அறிந்திருந்தால், தேவனை உண்மையோடு ஆராதிக்கும் உரிமை நமக்கு மறுக்கப்படுகிறது என்று இயேசு கூறினார். கிறிஸ்தவர் ஒருவர், சபைக்குழுமத்தின் இன்னொரு உறுப்பினர்மீது, தமது இருதயத்தில் தயவற்ற சிந்தனைகளுடன் ஆராதனைக்குச் செல்கிறார் என்றால், அந்த நபர் தேவனை ஆராதிக்க முயற்சி செய்வதில் எந்த மதிப்பும் இல்லாதிருப்பதாக தேவனுடைய வசனம் நிச்சயப்படுத்துகிறது. இருதயம் நேராக இராதபோது தேவனை நோக்கி ஜெபிப்பதில் நோக்கம் எதுவும் இருப்பதில்லை. தேவன் அறிகிறார் (லூக்கா 16:15; 1 யோவான் 3:20). சங்கீதக்காரர், "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" என்று எழுதினார் (சங்கீதம் 66:18). சகோதரர் ஒருவருடன் உறவுமுறையில் தவறாக நிலைத்திருக்கையில், தேவனுடன் நாம் நேராக இருக்க இயலாது (1 யோவான் 2:8-11; 4:20, 21). உண்மையில் விரோதத்தைக் கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவர், தங்கள் சபையின் ஆராதனையில் மற்றவர்களுக்குத் தடையாக இருக்கலாம்.

இந்த புத்திமதி, தீமையை நன்மையுடன் சமானப்படுத்தும் முயற்சிக்கு எதிராக எச்சரிக்கை செய்கிறது. பரிசேயர்கள் மிகச்சிறு விபரங்களில் மிகவும் உன்னிப்பாகக் கவனம் செலுத்தினர் (23:23), அதே வேளையில் அவர்கள் மற்றவர்களை விரோத உணர்வுடன் நியாயந்தீர்த்து கண்டனம் பண்ணினார். அவர்களைப் போலவே நாமும், கிறிஸ்தவராக இருத்தலை மறக்கும் அளவுக்கு, "கிறிஸ்தவ ஊழியத்தில்" மிகவும் பணிமும்முரமாக இருக்கலாம். புறம்பான இயக்கங்களினூடே நாம் செல்லுகையில், நாம் நமது இருதயங்களில், மோசமான உணர்வுகள், வெறுப்புணர்வு அல்லது பொறாமையைத் தேக்கி வைத்திருக்கலாம். சரியானது எதுவோ, அதைச் செய்வதில் நாம் குறைவுபட்டு,

ஆனால் ஆராதனைச் சடங்கு அந்தச் சூழ்நிலைக்குப் பரிகாரம் காணும் என்று நாம் நம்பும்போது, நம்மையே நாம் வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறோம். நாம் தேவனுடன் சரியாவதற்கு முன்னர் நமது சகோதரர்களுடன் விஷயங்களைச் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இயேசு கூறினார்.

இரண்டாவது நடைமுறைப்படுத்துதலில் (5:25, 26), சாத்தியமானால் வழக்குகள் நீதிமன்றத்திற்கு வெளியிலேயே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கர்த்தர் வலியுறுத்தினார். எந்த விஷயத்திலும் இது உண்மையாக உள்ளது, ஆனால் சக விசுவாசிகளுடனான விஷயத்தில் இது குறிப்பாக உண்மையாக உள்ளது. நமது “குடும்ப பிரச்சனைகளை” இந்த உலகத்தின் நீதிமன்றங்களுக்கு முன்பாகக் காட்சிப்படுத்தக் கூடாது என்று பவுல் அறிவுறுத்தினார் (1 கொரிந்தியர் 6:1-8). கிறிஸ்துவின் ஊழியம் காயப்படுத்தப்பட அனுமதிப்பதைக் காட்டிலும் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுதல் மேன்மையானதாக இருக்கும் என்று அவர் கூறினார். ஒரு கிறிஸ்தவர், இன்னொரு கிறிஸ்தவரை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லக்கூடாது, ஆனால் இயேசுவினாலும் பவுலினாலும் முன்வைக்கப் பட்டுள்ள கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். நமக்கும் மற்ற எந்த நபருக்கும் இடையில், இப்படிப்பட்ட சூழ்நிலை நம்மால் தவிர்க்கப்படக் கூடிய அளவில் நமது அதிகாரத்திற்குள் இருக்கும் என்றால், அதை நாம் அனுமதிக்கவே கூடாது (ரோமர் 12:17, 18).

## பாலுறவு பற்றிய சத்தியம் (5:27-30)

பாலுறவைத் தேவனே படைத்தார் என்பதால், அது “அசுத்தமானதாக” இருப்பதில்லை. தேவன் மனிதரைப் பாலுறவு கொள்ளக் கூடியவராகப் படைத்து அவருக்கு ஏற்ற துணை ஒன்றையும் அளித்தார். மனிதப் பாலுறவுத்தன்மை எவ்வளவு வல்லமை நிறைந்தது என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார். தவறான சந்தர்ப்பப்பொருளில் - அதாவது திருமணத்திற்குப் புறம்பே - பாலுறவு என்பது ஒரு நபரின் உடல்ரீதியான, உணர்வுரீதியான மற்றும் ஆவிக்குரிய நலம் ஆகியவற்றை அழிப்பதாக இருக்க முடியும் என்றும் அவர் அறிந்திருக்கிறார். ஆகையால் அவர், நமது பாலுறவு வெளிப்பாட்டை ஆளுகை செய்ய நமக்குச் சட்டங்களைக் கொடுத்தார். தேவன் நம்மீது அன்புகூருகிறார் மற்றும் நமக்கு மிகச்சிறப்பானது என்ன என்பதை அவர் அறிந்திருக்கிறார். “தற்செயலான பாலுறவு” என்று எதுவும் இருப்பதில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் திரைப்படங்களும், கவனமற்ற பாலுறவு நடத்தைகளை ஈர்ப்புடன் வெளிக்காண்பிக்கின்றன, ஆனால் அவைகள் இப்படிப்பட்ட வாழ்வுநடைகள் மக்களின் வாழ்வை எடுத்துப் போட்டுவிடுகின்றன என்ற கணக்கைக் கவனிக்கத் தவறுகின்றன. ஒரு நபர் பாலுறவு ரீதியாகத் தம்மை இன்னொருவரிடம் ஒப்புக்கொடுத்தல் என்பது, மிகவும் தீவிரமாகக் கவனிக்க வேண்டிய விஷயமாக உள்ளது. பாலுறவு என்பது உடல்ரீதியான செயலைக் காட்டிலும் மேலானதாக உள்ளது; உடல், மனம் மற்றும் ஆவி ஆகியவை ஈடுபடும் வகையில் அதைத் தேவன் வடிவமைத்தார்.

தொடக்கத்தில் தேவன், ஆதாமையும் ஏவாளையும் உண்டாக்கியபோது, “அது நல்லது” என்று அவர் கண்டார் (1:26-31). அவர்களின் உறவை அவர் ஆசீர்வதித்து, “நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்துங்கள்” என்று அவர்களுக்குக் கட்டளை இட்டார். பாலுறவு என்பது

*ஜென்ம பாவமல்ல. கணவன்/மனைவி என்ற உறவைத் தேவனே தோற்றுவித்தார் (ஆதியாகமம் 2:22-25). அதை அவரது வசனமே உறுதிப்படுத்திற்று (எபிரெயர் 13:4). திருமண அன்பு பற்றி நமக்குப் போதிப்பதற்கு அவர், தமது ஏவுதல் பெற்ற வார்த்தையில் ஒரு முழுப் புத்தகத்தையே (சாலொமோனின் உன்னதப் பாட்டு) உள்ளடக்கினார். பாலுறவு நடத்தைகளை ஆளுகை செய்யும் அவரது சட்டங்கள் நமக்கு மிகச்சிறப்பான ஆர்வம் ஊட்டக்கூடியவையாக உள்ளன (19:1-9; 1 கொரிந்தியர் 7:3-5).*

*பாலுறவு என்பது பிரச்சனையாக இருப்பதில்லை. பாலுறவைத் தவறாகவும் மிகையாகவும் பயன்படுத்தும் சமூகம் ஒன்றில் நாம் வாழ்கிறோம் என்பதே உண்மைப் பிரச்சனையாக உள்ளது. பற்பசையில் இருந்து வாகனங்கள் வரையில் எல்லாவற்றையும் விற்பதற்கு, பாலுறவு பயன்படுத்தப்படுகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கற்புத்தன்மையை வெளிப்படையாகக் கேலிசெய்கின்றன மற்றும் அவைகள் பாலுறவில் தாறுமாறுகள் பற்றி நகைச்சுவைத் துணுக்குகளை வெளியிடுகின்றன. பாலுறவை வெளிப்படையாகக் காண்பிக்கும் திரைப்படங்கள், இசை மற்றும் புத்தகங்கள், இளைஞர்களையும் இளம்பெண்களையும் இலக்காகக் கொண்டுள்ளன, பாலுறவு நடத்தையில் பொறுப்புள்ளவர்களாக இருத்தல் என்பதற்குப் பதிலாக இவைகள் இன்பமே சிறந்த நலம் என்ற கருத்தைப் பரிந்துரைக்கின்றன.*

*சூழ்நிலைரீதியான பாலுறவு வற்புறுத்துதல்கள் இணைந்து, கும்பலுடன் இணக்கமாகச் செல்லாவிட்டால் தாங்கள் அந்நியர்களாக அல்லது பிறழ்வுநிலை உள்ளவர்களாக இருப்போமோ என்று பக்குவமற்றவர்கள் நம்பும்படி செய்கின்றன. இது திருமண உறவிற்கு வெளியே பிறக்கும் பிள்ளைகள், கருக்கலைப்பு மற்றும் விவாகரத்து ஆகியவற்றின் விகிதத்தை அதிகரித்தலை விளைவித்து உள்ளது. பாலுறவின் மூலம் கடத்தப்படும் வியாதிகளுக்கு எதிராக எச்சரிக்கை செய்யும் விளம்பரங்கள், தவறான பாலுறவை விலக்கி வைத்தலுக்குப் பதிலாக "பாதுகாப்பான உடலுறவு" என்பதையே பரிந்துரைக்கின்றன. திருமணத்திற்கு முன்பு பாலுறவில் இருந்து விலகி இருத்தலும், தேவபக்தியும் ஒழுக்கமும் ஆவிக்குரிய மதிப்பீடும் கொண்டுள்ள ஒருவரை/ஒருத்தியை திருமணம் செய்துகொள்ளுதலுமே, உண்மையிலேயே பாதுகாப்புள்ள பாலுறவு நடவடிக்கையாக உள்ளது. பின்பு இவ்விருவரும் திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்க வேண்டும்.*

*சமீபத்திய சில படிப்புகள், பாலுறவு ரீதியான எண்ணப்போக்குகளில் சில, மேன்மையானவற்றிற்கான மாற்றத்திற்குத் தொடக்கமாக இருக்கலாம் என்ற நம்பிக்கையை அளித்துள்ளன. கருக்கலைப்புக்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது, இளம் மக்களில் சிலர் துய்மைக்கான வாக்குறுதிகளை ஏற்படுத்துகின்றனர், மற்றும் சில பகுதிகளில் உள்ள பள்ளிகள், குடும்ப வாழ்வுப் பாடத்திட்டத்தில் விலகியிருத்தலை மேம்படுத்துகின்றன.*[55]

## காமத்தை வெல்லுதல் (5:27-30)

ஆத்துமாவை அழித்து வேசித்தனம் அல்லது விபசாரத்திற்கு வழிநடத்துகிறதான, காமத்தின் பாவத்திற்கு எதிராக இயேசு எச்சரித்தார். காமம் கொள்வதற்கான சோதனை நமது நவீன கலாச்சாரத்தினால் பெருக்கப்படுத்தப்பட்டு மாத்திரம் உள்ளது. வில்லியம் ஹென்றிக்ஸென்

அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> (பாவம்) "அழித்துப்" போடப்பட வேண்டும் (கொலொசெயர் 3:5). சோதிக்கப்படுதல் என்பது *உடனடியாகவும் தீர்மானமாகவும்* புறம்பே வீசி எறியப்பட வேண்டும் ... *அறுவைச் சிகிக்சை தீவிரமானதாக இருக்க வேண்டும்.* மிகச்சரியாக இந்தக் கணத்திலும் எந்தத் தயக்கமும் இன்றியும், ஆபாசப் புத்தகமானது எரிக்கப்பட வேண்டும், அசிங்கமான படங்கள் அழிக்கப்பட வேண்டும், ஆத்துமாவை அழிக்கும் திரைப்படம் கண்டனம் பண்ணப்பட வேண்டும், பாவம் நிறைந்த ஆனாலும் நெருக்கமான சமூகப் பிணைப்பு முறிக்கப்பட வேண்டும், தடைநிறைந்த பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும். பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், விசுவாசி கடினமாகப் போராட வேண்டும். நிழல் யுத்தம் ஒருக்காலும் ஒன்றுக்கும் உதவாது [1 கொரிந்தியர் 9:26, 27].[56]

டேவிட் ஸ்டுவர்ட்

## விவாகரத்து பற்றி இயேசுவின் போதனை (5:31, 32)

மத்தேயு 19:1-12ல் இயேசு, திருமணம், விவாகரத்து மற்றும் மறுதிருமணம் ஆகியவற்றைப் பற்றிப் பல சத்தியங்களை வெளிப்படுத்தினார். *முதலாவது அவர், வாழ்நாள் முழுவதற்கும் ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதே தேவனுடைய தொடக்ககாலத் திட்டமாக இருந்தது என்று கூறினார்* (19:3-5; ஆதியாகமம் 2:18-25). அவரது உரையைக் கேட்டவர்களுக்கு அவர், இனப்பெருக்கம் மற்றும் தோழமை ஆகியவற்றிற்காகத் தேவன், ஆணென்றும் பெண்ணென்றும் இரு பாலினங்களைப் படைத்தார் என்பதை நினைவூட்டினார். தேவன், ஆணைப் பெண்ணுக்கென்றும் பெண்ணை ஆணுக்கென்றும் படைத்தார், மற்றும் அந்த வடிவமைப்பில் ஏற்படுத்தப்படும் எந்த மாற்றமும், விலகிச்செல்லும் நடத்தையாக உள்ளது (ரோமர் 1:26, 27). ஆதாமையும் ஏவாளையும் தேவன் ஒன்றாக்கினார், முதல் திருமணச் சடங்கை அவரே செயல்விளைவுடன் நிறைவேற்றினார். திருமண உறவு நிரந்தரமானது என்று அவர் அர்த்தப்படுத்தினார்.

*இரண்டாவது, எதிர்காலத் திருமணங்கள் யாவற்றிற்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும்படி ஆதாமையும் ஏவாளையும் தேவன் ஒன்றாக்கினார் என்று நமது கர்த்தர் கூறினார்* (19:6). அவர்களைத் தேவனே இணைத்தார், அவர்களைப் பிரிக்கும் அல்லது பிரிவதற்கான ஒரு காரணத்தைப் பரிந்துரைக்கும் சட்டப்பூர்வமான உரிமையையும் அவரே கொண்டுள்ளார். தேவனுடைய வடிவமைப்பில் சேதம் ஏற்படுத்துதல், அழிவான விளைவுகளைக் கொண்டு வருகிறது. இன்றைய நாட்களில் நமது உலகத்தில் திருமணத்தின் பரப்பானது, முறிந்துபோன வாழ்வுகள், அழிக்கப்பட்ட இல்லங்கள் மற்றும் இடர்ப்பாடு ஏற்படுத்தும் பிள்ளைகள் ஆகியோரால் நிரம்பியுள்ளது.

*மூன்றாவது இயேசு, திருமணத்தின் நிலைப்புத்தன்மையை ஊக்குவித்தார்* (19:7, 8). திருமணத்தைக் கனப்படுத்தும்படி வடிவமைக்கப் பட்டிருந்த, மோசேயின் தொடக்க அறிவுறுத்துதல்களை, மனிதர்கள் தங்கள் உறுதிப்பாடுகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்திக்

கொண்டிருந்தனர். பரிசேயர்களில் சிலர், "அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?" என்று இயேசுவினிடம் கேட்டனர் (19:7). அவர்களின் இருதயங்கள் கடினமாக இருந்தன என்பதே இயேசுவின் பதிலாக இருந்தது (19:8). விவாக ரத்து என்பது தேவனுடைய தோற்றகாலத் திட்டத்தின் பகுதியாக இராதிருந்தாலும், அந்தத் திட்டத்தை மக்கள் மீறிக்கொண்டிருந்தனர். எனவே தேவன், செய்யப்பட்டுக் கொண்டிருந்தவற்றை முறைப்படுத்தும் படிக்கு, அதன்மூலம் திருமணத்தைப் பாதுகாக்கும்படிக்கு, அறிவுறுத்துதல்கள் தருவதற்கு மோசேயை அனுமதித்தார் (உபாகமம் 24:1-4). மல்கியா 2:14-16 வசனப்பகுதி, தேவன் விவாகரத்தை வெறுக்கிறார் என்று தகவல் அளிக்கிறது. அவர் இந்தப் பாடக்கருத்தின்மீது தமது மனதை எப்போதாவது மாற்றிக் கொண்டதாகச் சுட்டிக்காட்டுதல்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் இருப்பதில்லை. திருமணத்திற்காக தேவனுடைய தோற்றகால நோக்கத்தை விளக்குவதற்கு, இயேசு ஆதிகாலத்தையே பின்னோக்கிக் கண்ணோக்கினார்.

*கடைசியாக, இயேசு திருமண உறவின் பரிசுத்தத்தை வலியுறுத்தினார்* (19:9). துணைவர் அல்லது துணைவியார், பாலுறவில் ஒழுக்கவீனமாக ஆனார் (வேசித்தனம் செய்தார்) என்பதைத் தவிர, வேறு எந்தக்காரணத்திற்காகவும் விவாகரத்தை எவரொருவரும் நாடக்கூடாது என்று அவர் கூறினார். வேறொரு காரணத்திற்காகத் துணைவரைத் தள்ளி வைத்து, மறுதிருமணம் செய்துகொள்ளும் எவரும் விபசாரம் செய்த குற்றத்திற்கு ஆளாகிறார். தள்ளிவிடப்பட்டவரை (ளை) திருமணம் செய்து கொள்ளபவரும் (ளும்) விபசாரக் குற்றத்திற்கு ஆளாகிறார் (ள்).

இதை ஒரு கடினமான கூற்று என்ற வகையில் அப்போஸ்தலர்கள் உணர்ந்து அறிந்தனர் (19:10), ஆனால் இயேசு, தாம் கூறியிருந்ததை மென்மையாக்க முயற்சி செய்யவில்லை. மாறாக அவர், திருமணத்திற்காக தேவனுடைய திட்டத்தை மீறுதலைக் காட்டிலும், அண்ணகராக இருத்தல் மிக நல்லதாக இருக்கும் என்று செயல்விளைவில் கூறினார் (19:12). மக்கள் திருமணம் முடிக்கும் முன்பு இந்த சத்தியம் அவர்களுக்குப் போதிக்கப்பட முடியும் என்றால், அவர்கள் திருமண உறுதிப்பாட்டைப் பற்றி மிகவும் தீவிரமாகச் சிந்திக்கலாம் மற்றும் தீர்த்து வைக்கப்படக் கூடிய சில பிரச்சனைகளின் நிமித்தம் விவாகரத்துப் பெறுவதற்குப் பதிலாக திருமணத்தைச் செயல்படச் செய்வதற்கு கடினமான முயற்சி செய்யலாம்.

## சத்தியம் (5:33-37)

சத்தியம் என்பது இன்றைய நாட்களில் அதிகவிலையுள்ளதாக உள்ளது. மக்களில் பெரும்பான்மையானவர்கள் சிலவேளைகளில் பொய்கூறும் குற்றப்பட்டிருப்பதாகச் சமீபத்திய படிப்புகள் காண்பித்துள்ளன.[57] அவர்கள் தங்களை மேன்மையானவர்களாகக் காண்பிப்பதற்கு, தங்களை அல்லது தங்களுக்கு அன்பானவர்களைத் துன்பத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு, யாரேனும் ஒருவரின் உணர்வுகளுக்குத் தீங்கிழைக்காமல் இருப்பதற்கு அல் லது தங்களைத் தொந்தரவு செய்பவர்களைத் தங்களிடம் இருந்து விட்டு விலக்குவதற்குப் பொய்கூறுகின்றனர். "வெள்ளைப் பொய்கள்" என்பது பற்றி நாம் பேசலாம், ஆனால் ஒரு பொய் என்பது பொய்யாகவே உள்ளது.

பொய்கூறுபவர்கள் "பொய்க்குப் பிதாவான பிசாசின்" பிள்ளைகளாக இருக்கின்றனர் என்று இயேசு கூறினார் (யோவான் 8:44). "பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று யோவான் எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:8; காண்க 22:15). ஞானவானான மனிதர் (சாலொமோன்), "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே" என்று எழுதினார் (நீதிமொழிகள் 23:23அ). சத்தியம் நம்மை விடுதலையாகக்கும் என்று இயேசு கூறினார் (யோவான் 8:32).

## ஆணையிடுதல்கள் (5:33-37)

இன்றைய நாட்களில் பலர், தாங்கள் கூறுபவற்றிற்கு மதிப்புக் கூட்டுவதற்காக, "நான் ஆணையிடுகிறேன்" என்று கூறுகின்றனர். ஒரு நபருடைய வார்த்தை நம்பக்கூடியதாக இருக்கும் என்றால், ஆணையிடுதலுக்கு அவசியமே இருப்பதில்லை. எதன்மீதும் ஆணையிடுதல் என்பது நமது வார்த்தைகளுக்கு கனத்தைக் கூட்டுவதில்லை என்று இயேசு குறிப்பிட்டார் (5:34-36). நமது நம்பகத் தன்மைக்காக வேறொரு நபரை ஆணையிடச் செய்வித்தலும் உதவுவதில்லை. ஆனால் எது செய்கிறது? எப்போதுமே உண்மை நிறைந்தவராக இருத்தலும் நம்பிக்கைக்கு உரியநபர் என்று அறியப்படுதலுமே செய்யத்தக்கதாக உள்ளது (காண்க எபேசியர் 4:25).

ஏதேனும் சிலவற்றின்மீது ஆணையிடுதல் மூலமாக நமது வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்க முயற்சிப்பதற்கு மாறாக, நமது வார்த்தைகள், நாம் கூறுவதை அர்த்தப்படுத்த மாத்திரம், நாம் அனுமதிக்க வேண்டும். நாம் "ஆம்" என்று கூறும்போது, அதை அர்த்தப்படுத்த வேண்டும். நாம் "இல்லை" என்று கூறும்போது, அதையும் அர்த்தப்படுத்த வேண்டும்! அப்போது மக்கள், நாம் கூறுவதன் மீது நம்பிக்கை வைப்பார்கள். நமது உலகத்தில் நாம், "எனது வார்த்தை என்னைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது" என்பதில் இருந்து, "கட்டுப்படுத்துதல் ஒன்று இல்லாமல் உங்கள் வார்த்தையை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது" என்பதற்குக் கடந்து சென்றுள்ளோம். மக்கள் ஒருவர் மற்றவரை நம்பாத போது, இல்லம் மற்றும் சபையில் கூட, நிலைத்த உறவுகளைக் கட்டி எழுப்புதல் கடினமாக உள்ளது.

## நமது உரிமைகளைப் பற்றி விஷயம் என்ன? (5:38-42)

பரிசேயர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றி வற்புறுத்தியது தான் அவர்களின் பிறழ்வுகளின் வேராக இருந்தது. "சுயம்" மகிமைப்படுத்தப்படும் காலத்தில் நாம் வாழ்கிறோம். சுயமையம் கொண்டவர்களாக, சுயத்தில் ஈடுபாடு உடையவர்களாக மற்றும் சுயத்தைத் திருப்திப்படுத்துபவர்களாக இருக்கும்படி, ஒவ்வொரு மூலையில் இருந்தும் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம். சுயநலமான இந்தக் காலத்தில் மக்கள், குடிமை உரிமைகள், பெண்களின் உரிமைகள், குற்றம் செய்தவர்களின் உரிமைகள், கைதிகளின் உரிமைகள் மற்றும் ஒரினச் சேர்க்கையாளர்களின் உரிமைகள் ஆகியவற்றை வற்புறுத்துகின்றனர். மக்கள் உரிமைகள் பற்றி, விசேஷமாகத் தங்கள் சொந்த உரிமைகள் பற்றிய விஷயம் அவர்களின் உள்ளங்களை ஆட்டிப்படைக்கிறது. நமது தனிப்பட்ட உரிமைகள்

நமது வாழ்வில் முதல் முன்னுரிமை கொண்டிருக்கும்போது, உண்மையான நீதி மறக்கப்படுகிறது.

மத்தேயு 5:38-42 வசனப்பகுதி, கிறிஸ்தவர்கள் வன்முறையை ஒருக்காலும் எதிர்த்து நிற்கக் கூடாது என்று மறைமுகமாக உணர்த்துவதாகப் பலர் தவறாக விளக்கம் அளித்துள்ளனர். யுத்த காலங்களில், "உணர்வுப்பூர்வமாக மறுத்தல்" என்பதை ஆதரிக்க, போர் ஒழிப்புக் கோட்பாட்டைப் போதிப்பதற்கும் மரணதண்டனைக்கு எதிராக விவாதிப்பதற்கும் இது பயன்படுத்தப் பட்டுள்ளது. யாரேனும் ஒருவர் நம்மைத் தவறாக நடத்தும்போதோ அல்லது யாரேனும் ஒருவர் தமது இல்லத்திற்குள் புகுந்து இடர்ப்பாடு ஏற்படுத்தும்போது நாம் நமது குடும்பத்தைப் பாதுகாக்ககக் கூடாது என்றோ இயேசு அர்த்தப்படுத்தவில்லை. ஆல்பர்ட் பேர்ன்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்.

> நமது குடும்பத்தினர் கொலைசெய்யப்படுதலை அல்லது நாமே கொலைசெய்யப்படுவதைப் போதிக்க, கிறிஸ்து இங்கு விருப்பம் கொண்டிருக்கவில்லை. மாறாக எதிர்த்து நிற்பதைப் போதிக்கவே நோக்கங்கொண்டிருந்தார். இயற்கை விதியும், மனிதரீதியான மற்றும் தெய்வீகமான எல்லா சட்டங்களும், *உயிர்வாழ்வு* அபாயத்தில் இருக்கும்போது சுயபாதுகாப்புச் செய்துகொள்வதை நியாயப்படுத்துகின்றன … . நமது மீட்பர் கூறியதன் மூலம் *அவர்* அர்த்தப்படுத்தியது என்ன என்பதை அவர் உடனடியாக விளக்குகின்றனர். வாழ்வு அபாயத்தில் உள்ள விஷயம் பற்றிக் குறிப்பிட அவர் நோக்கம் கொண்டிருந்தார் என்றால், நிச்சயமாகவே அதைப் பற்றி அவர் குறிப்பிட்டிருப்பார்.[58]

## "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" (5:43-48)

ஒருவர் தமது விரோதியைச் சிநேகிக்க வேண்டும் என்ற இயேசுவின் கட்டளை, மக்களில் பலருக்குச் சாத்தியமற்றதாக ஒலிக்கிறது. "அன்பு" (*agapē*) என்பது உண்மையில் எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நாம் அடிக்கடி தவறாகப் புரிந்துகொண்டுள்ளதே இதற்கு ஒரு காரணமாக உள்ளது. நம்மைத் தவறாக நடத்தியவர்கள் மீது இதமான உணர்வுகள் கொண்டிருத்தல் என்பது சாத்தியமற்றதாக இருக்கலாம், ஆனால் அவர்களை இரக்கமாக நடத்துதல் என்பது நாம் அடைய இயலாததாக இருப்பதில்லை. 1 கொரிந்தியர் 13:4-7ல் பவுலினால் தரப்பட்ட "அன்பு" என்பதற்கான விளக்கம், மற்றவர்கள் மீது நமது செயல்பாடுகள் பற்றியே முதன்மையாகக் கவனம்குவிக்கிறது: பொறுமையாயிருத்தல், தற்பொழிவை நாடாதிருத்தல், இறுமாப்பாயிராதிருத்தல், சினமடையாதிருத்தல், தீங்கு நினையாதிருத்தல் மற்றும் அயோக்கியமானதைச் செய்யாதிருத்தல். ஒருவருக்கு விருப்பமானவற்றை மிகச்சிறப்பாகச் செய்யும்படி நாடுதல் என்பது அவர்மீது அன்புகூருதலாக உள்ளது. நாம் இதைச் செய்யும்போது, நாம் தேவனைப் போலச் செய்கிறோம். அவர் தமது படைப்பின் நடத்தை குறித்து அடிக்கடி வருந்துகிறார், ஆனால் அவர் இன்னமும் ஆசீர்வாதங்களைப் பொழிந்து நமது தேவைகளைக் கவனிக்கிறார்.

டேவிட் ஸ்டிவர்ட்

குறிப்புகள்

[1]Donald A. Hagner, *Matthew 1-13*, Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 111. [2]Ibid., 116; Talmud *Kiddushin* 28a; and Mishnah *Aboth* 3.12. [3]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke*, ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 38. [4]John Lightfoot, *A Commentary on the New Testament from the Talmud and Hebraica: Matthew-1 Corinthians,* vol. 2, *Matthew-Mark* (Oxford: Oxford University Press, 1859; reprint, Grand Rapids, Mich.: Baker, 1979), 109. வேதாகமத்திற்கு வெளியே இந்த சொற்றொடர் பயன்படுத்தப்படும் யூதாத்துவ எழுத்துக்கள் பலவற்றை லைட்பூட் அவர்கள் தருகிறார். [5]R. T. France, *The Gospel According to Matthew*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 120. [6]Leon Morris, *The Gospel According to Matthew*, Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 114. [7]See Joachim Jeremias, *Jerusalem in the Time of Jesus,* trans. F. H. and C. H. Cave (Philadelphia: Fortress Press, 1969), 17. [8]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 85. [9]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 52. [10]Mishnah *Yoma* 8.9.

[11]*Didache* 14.2. [12]Gundry, 87. [13]See Lightfoot, 118; Talmud *Berakoth* 20. [14]*Leviticus Rabbah* 23.12; see Talmud *Berakoth* 24a; *Shabbath* 64b. [15]Sirach 9:8 (NRSV). [16]Jack P. Lewis, *The Gospel According to Matthew*, Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 91. [17]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 46. *Skandalon* என்ற கிரேக்க வார்த்தை, "இடறல் ஏற்படுத்தும் கட்டை" அல்லது "கண்ணி" என்பதைக் குறிக்கிறது. ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், இது ஒருவர் சோதிக்கப்படுவதற்கு அல்லது மயக்கப்படுவதற்குக் காரணமாகிறது (18:6, 7). [18]Eusebius *Ecclesiastical History* 6.8.1–2. [19]Mounce, 46. [20]Lewis, 92. See *Rabbah Ecclesiastes* 1.4.

[21]இந்த வடிவமைப்பு 1ம் வசனத்தில் "எனவே" என்பதை இடுகிற மொழிபெயர்ப்பில் குழப்பம் விளைக்கிறது. [22]Christopher Wright, *Deuteronomy*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1996), 255. [23]Lightfoot, 122. [24]Mishnah *Yebamoth* 14.1. இருப்பினும், ஒரு பெண் தன்னை விவாகரத்து செய்யும்படி தனது கணவரை வற்புறுத்த நீதிமன்றம் செல்ல முடிந்தது. (Mishnah *Arakhin* 5.6; *Nedarim* 11.12.) [25]Josephus *Antiquities* 4.8.23. [26]விவாகரத்திற்கான அடிப்படைகள் என்ற வகையில், உபாகமம் 24:1ல் உள்ள "இலச்சையான காரியம்" என்பதன் அர்த்தத்தின் மீதான விவாதம், இவ்வசனப்பகுதியின் பிரதான வலியுறுத்தத்தைக் காணாது கடந்துசென்றது: பெண்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆண்கள் தங்கள் மனைவியரை விவாகரத்து செய்வதற்கு முன்னர் இருமுறை யோசிக்க வைத்தல் என்பவையே இதன் பிரதான வலியுறுத்தமாகும். [27]Mishnah *Gittin* 9.10. பிற்பாடு அகிபா ரபீ என்பவர், "அவளைக் காட்டிலும் வேறு யாரேனும் அழகுள்ளவள் என்று அவர் கண்டாலும்கூட" என்று கூறினார். இந்த நிலைப்பாட்டை அவர், "அவள்மேல் பிரியமற்றவனானால்" (உபாகமம் 24:1) என்ற சொற்றொடரின் அடிப்படையில் கூறினார். [28]Hagner, 125. [29]W. F. Albright and C. S. Mann, *Matthew*, The Anchor Bible (Garden City, N.Y.: Doubleday & Co., 1971), 65. [30]*Porneia*, என்ற சொற்றொடர் விரிவான வகையில் பயன்படுத்தப்படும்போது, இது "விபச்சாரம்" (*moicheia*) என்பதையும் சூழ்ந்துகொள்ள முடியும். உதாரணமாக, சீராக் 23:23ம் வசனம், "அவளது வேசித்தனத்தினாலே அவள் விபச்சாரம் செய்திருக்கிறாள்"

*என்று கூறுகிறது.*

[31]Mishnah *Ketuboth* 3.5; *Sotah* 5.1; *Yebamoth* 2.8. [32]Philo *Special Laws* 2.1.5; Mishnah *Nedarim* 1.3, 4. [33]Mishnah *Shebuoth* 4.13. [34]Mishnah *Sanhedrin* 3.2. [35]Josephus *Wars* 2.8.6. [36]Ibid., 2.8.7; see *Community Rule* 5.7, 8. [37]*Code of Hammurabi* 196, 200. [38]See Josephus *Antiquities* 4.8.35; Mishnah *Baba Kamma* 8.1, 2. [39]John MacArthur, Jr., *The MacArthur New Testament Commentary: Matthew* 1-7 (Chicago: Moody Press, 1985), 332. [40]See Mishnah *Baba Kamma* 8.6.

[41]Wilkins, 41. [42]Herodotus 8.98; Xenophon *Cyropaedia* 8.6.17. [43]Epictetus 4.1.79. [44]Wilkins, 42. [45]Hagner, 131. [46]Leon Morris, *Luke: An Introduction and Commentary*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 143. [47]France, 127. [48]See Morris, *Matthew*, 129–30. *இஸ்ரவேல் மக்கள் தங்கள் விரோதிகள் குறித்து கண்டிப்பான எண்ணப்போக்கை மேற்கொள்ளவேண்டும் என்று, கானான் நாட்டைக் கைப்பற்றிய விஷயம் கேட்டுக்கொண்டது. அந்த வேளையில், கானானியரின் மாபெரும் துன்மார்க்கத்திற்காக அவர்களை தண்டிப்பதற்கு, தேவன் தமது மக்களை பயன்படுத்திக் கொண்டார் (ஆதியாகமம் 15:13-16; லேவியராகமம் 18:24, 25; உபாகமம் 9:5; 1 இராஜாக்கள் 14:24).* [49]*Community Rule* 1.4; see 9.21, 22. [50]Josephus *Against Apion* 2.15.

[51]Hare, 59. [52]Morris, *Matthew*, 132, n. 167. [53]Mishnah *Nedarim* 3.4; *Tohoroth* 7.6; *Baba Kamma* 10.1, 2. [54]Gundry, 99. [55]*உதாரணமாக, ஆலன் கட்டமாச்செர் நிறுவனத்தில் 2008ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் செய்யப்பட்ட ஆய்வுப்படிப்பு ஒன்று, 2000 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், அமெரிக்க நாட்டில் கருக்கலைப்புகளின் விகிதம் 9 சதவிகிதம் குறைந்தது என்று அறிக்கை செய்தது.* (“U.S. Abortion Rate Falls, Study Finds” [http://www.reuters.com/article/domesticNews/idUSN1722176020080117; Internet; accessed 15 July 2009].) [56]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 303. [57]*அல்ரிச் போசெருடைய பின்வரும் புத்தகத்தில், இது போன்ற கூற்று அப்படிப்பட்ட ஒரு அறிக்கையாக உள்ளது:* “We’re All Lying Liars: Why People Tell Lies, and Why White Lies Can Be OK,” *U.S. News & World Report* (http://health.usnews.com/articles/health/brain-and-behavior/2009/05/18/were-all-lying-liars-why-people-tell-lies-and-why-white-lies-can-be-ok.html; Internet; accessed 17 July 2009). [58]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Philadelphia: N.p., 1832; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1974), 59.

# ஏரோதுவின் தேவாலயம்


அந்தோனியோ
கோட்டை
புறஜாதியார் முற்றம்
ஆசாரியர்களின்
முற்றம்
இஸ்ரவேல்
மக்களின் முற்றம்
பலீபிடம்
அலங்கார
வாசல்
பெண்களின்
முற்றம்
மகாப்பரிசுத்த
ஸ்தலம்
பரிசுத்த
ஸ்தலம்
சாலொமோன்
முற்றம்